Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு+II விலை: ரூபா 8.00


# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TOURS (PVT) LTD.
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field.
உள்நாட்டு, வெளிநாட்டு விமான ரிக்கெட்டுக்களுக்கும்
பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்
இல.32, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(பொலிஸ் நிலைய வீதி, யாழ்ப்பாணம்)
021 222 3916, 0777 801038

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 மார்கழி 09 ஹிஜ்ரி 1428 துல்கதா 21 (24.12.2005) சனிக்கிழமை இதழ் 85

# மன்னாரில் கிளைமோர்; 16 கடற்படையினர் பலி!




மன்னார் —

மன்னார் பேசாலைப் பகுதியில் கடற்படையினரின் வாகனத் தொடரணிமீது நேற்று நடத்தப்பட்ட கிளைமோர் மற்றும் கண்ணிவெடி, ஆர்.பி.ஜி. தாக்குதலில் 16 கடற்படையினர் கொல்லப்பட்டதுடன் மேலும் 16 பேர் படுகாயமடைந்தனர்.

நேற்று பிற்பகல் 2.25 மணியளவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதல் நாடெங்கும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தத் தாக்குதல் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

மன்னாரிலிருந்து தலைமன்னார் நோக்கி கடற்படையின் வாகனத் தொடரணி சென்றுகொண்டிருந்தபோது பேசாலைக்கு அடுத்ததாகவுள்ள (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொங்கியெழும் மக்கள் படை தாக்குதலுக்கு உரிமை!


மன்னார் —

பேசாலையில் நேற்று கடற்படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு மன்னார் மாவட்ட பொங்கியெழும் மக்கள் படை உரிமை கோரியுள்ளது.

இது தொடர்பாக மேற்படி அமைப்பு வெளியிட்டிருக்கும் அறிக்கையில் -

கடந்த சனிக்கிழமை புங்குடுதீவில் சகோதரி தர்சினி கொடூரமான முறையில் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொலைசெய்யப்பட்டதற்கு யாழ்.மாவட்ட பொங்கியெழும் மக்கள் படைக்கு கரம்கொடுக்கும் வகையில் ஓர் இறுதி எச்சரிக்கையாக கடற்படையினர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இக்கட்டான நிலைக்குள் போர்நிறுத்த உடன்பாடு!



கொழும்பு —

இலங்கையின் வடபகுதியிலுள்ள சூழ்நிலை மிகவும் அபாயகரமானவையெனவும், இதனால் யுத்தநிறுத்த உடன்படிக்கை மிகவும் இக்கட்டான சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளதாகவும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் தெரிவித்தார். கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் நேற்றிரவு இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது - (12 ஆம் பக்கம் பார்க்க)

## இணைத் தலைமை தூதுவர்களை அரசாங்கம் அவசரமாக சந்திப்பு!

கொழும்பு —

## பாதுகாப்புச்சபைக் கூட்டத்தை அவசரமாக கூட்டினார் மகிந்த!

மன்னார் —

கொழும்பு

மன்னாரில் நேற்று நடைபெற்ற தாக்குதலை அடுத்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அழைப்பை யேற்று இணைத் தலைமை நாடு களின் தூதுவர்கள் நேற்றுமாலை அரசாங்கப் பிரதிநிதிகளுடன் அவசரமாகச் சந்தித்து பேச்சு நடத்தினர்.

நேற்றுமாலை 4 மணியளவில் அலரிமாளிகையில் நடைபெற்ற இந்த அவசர கூட்டத்தில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலிகாகர ஆகியோர் கலந்துகொண்டனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

மன்னார்

மன்னார் - பேசாலையில் கடற் படையினர் மீது நேற்று நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பாதுகாப்புச் சபையை அவ சரமாகக் கூட்டி நிலைமையை ஆராய்ந் தார்.

நேற்றுமாலை இடம்பெற்ற பாது காப்புச் சபைக் கூட்டத்தில் - பிரதிப் பாது காப்பு அமைச்சர் ரட்ண சிறி விக்கிரம நாயக்க, பாதுகாப்பு அமைச்சின்செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் முப் படைகளின் பிரதம தளபதிகள், கூட் டுப்படைத் தளபதி அட்மிரல் தயா சந்த கிரி, பொலிஸ் மா அதிபர் ஆகியோர் கலந்துகொண்டதாகத் தெரியவருகிறது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## இணை-தலைமை தூதர்கள் கிளிநொச்சி வருகின்றனர்!

கிளிநொச்சி

இணைத் தலைமை நாடுகளின் தூதுவர் கள் இன்று கிளிநொச்சிக்கு விஜயம்செய்து தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனைச் சந்தித்துப் பேசவுள்ளனர்.

இன்று முற்பகல் 11 மணிக்கு சமாதானச் செயலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

போர்நிறுத்த உடன்படிக்கையில் தற்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலை, சமாதான முயற்சிகள் உள்ளிட்ட (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலனாய்வு அதிகாரி சுட்டுக்கொலை!

கொழும்பு

இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் நுவரெலியாவில் நேற்றுமுன் தினம் இரவு இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சார்ஜன்ட் சஜன்தனபால என்ற மொனராகல - ஹகலந்தாவைச் சேர்ந்த புலனாய்வு அதிகாரியே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

நேற்று முன்தினம் மாலை நுவரெலிய பொலிஸ் நிலையத் (12 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.குடாநாட்டில் தொடர்ந்தும் படையினர் மீது தாக்குதல்கள்!

யாழ்ப்பாணம்

யாழ்.குடாநாட்டில் நேற்றும் படையினர் மீதான தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெற்ற அதேவேளை பொது மக்கள் மீது இராணுவத்தினர் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதல்களில் பத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்தனர்.



சாவகச்சேரியில் படையினரின் தாக்குதலில் காயமடைந்தவர்

நேற்றுப்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி ப.நோ.கூ சங்கத்திற்கு சமீபமாக அமைந்திருந்த இராணுவ காவலரண் மீது கைக்குண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. இதன்போது இரண்டு இராணுவத்தினர் காயமடைந்ததாக கூறப்படுகிறது.

பதிலுக்கு இராணுவத்தினர் சரமாரியாக துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் சாவகச்சேரியை சேர்ந்த சின்னராசா இராஜதுரை (வயது 62) யோகராஜா புஸ்பமலர் (வயது 21) சாவகச்சேரி சிவன்கோவிலடியைச் சேரந்த தனபாலசிங்கம் ஜெயந்திரகுமார் (வயது 37) ஆகிய மூவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இராணுவத்தினர் மேற்கொண்ட பதில் தாக்குதலால் அதிர்ச்சியடைந்து சாவகச்சேரி - டச்சுவீதியைச் சேர்ந்த எஸ்.தர்மலிங்கம் (வயது 51) என்ற ஓட்டோ சாரதி உயிரிழந்தார். இவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

நீர்வேலி - கரந்தன் சந்தியில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் ஓட்டோ ஒன்றின்மீது இராணுவத்தினர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையின் தாக்குதலில் 25 பொதுமக்கள் காயம்!

மன்னார்

கடற்படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலையடுத்து அப்பகுதி பொதுமக்கள் மீது கடற்படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலில் எட்டு வயது சிறுவன் உட்பட 25 பேர் காயமடைந்து பேசாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் கடும் காயங்களுக்குள்ளான பேசாலையைச் சேர்ந்த ஏ.விக்டர் பெர்னாண்டோ (வயது 41) மற்றும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## செங்கலடி யுவதீ சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு

மட்டக்களப்பு - செங்கலடியில் இளைஞர் ஒருவரைக் கடத்திச் செல்ல முற்பட்ட ஆயுதபாணிகள் - அவரது சகோதரியைச் சுட்டுக்கொன்றனர்.

செங்கலடி - பவுண்டறி வீதியில் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது - (12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். குடாநாட்டில்

# மாணவர் மீதான தாக்குதல்கள் அதிகரித்துள்ளதால் இறுதிப்பரீட்சையை நடத்துவது சாத்தியமில்லை!

### தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணம் —

யாழ்.குடாநாட்டில் இராணுவத்தினர் மாணவர்களையும், பொதுமக்களையும் கைதுசெய்வதுடன், கண்மூடித்தனமாக தாக்கியும் வருகின்றனர். இதனால் குடாநாட்டில் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த ஆண்டுக்கான இறுதிப்பரீட்சையை தற்போது நடத்துவது சாத்தியமில்லாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இறுதிப்பரீட்சையைத் திட்டமிட்டபடி நடத்தாது ஒத்திவைக்குமாறு யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ள சமாதான காலத்தில் யாழ்.குடாநாட்டில் அண்மைக்காலமாக எமது தமிழ் மாணவர்களின் மீதும், மக்கள் மீதும் இராணுவத்தினராலும் அவர்களின் அடிவருடிகளாலும் மேற்கொள்ளப்படும் இராணுவ அடாவடித்தனங்கள் அதிகரித்துள்ளன.

இதற்கு முற்றுப்புள்ளிவைத்து ஒரு சுமுகநிலையை குடாநாட்டில் ஏற்படுத்துவதற்காக குடாநாட்டின் உயர் கல்வி நிறுவனங்கள் அனைத்தும் தமது சகல கல்விச் செயற்பாடுகளையும் இடைநிறுத்தி இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டுவருகின்றன. எனவே தொழில்நுட்பக் கல்லூரியும் இவற்றில் உள்ளடக்கப்பட்டு பங்களிப்பை வழங்குகிறது.

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் கல்விகற்கும் மாணவர்களாகிய நாம் (சகல கற்கைநெறிகளும்) குடாநாட்டின் தற்போதைய உயிருக்கு உத்தரவாதம் அற்ற ஒரு சூழ்நிலை காணப்படுவதால், எமது இறுதிப்பரீட்சைக்கு எவ்வாறு சமுகமளிப்பது என்பதைப் பற்றி குழம்பிய நிலையில் உள்ளோம். எமது இறுதிப் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்கள் குடாநாட்டில் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் கல்லூரிக்கு சமுகமளிப்பதில் பெரும் சிக்கல் உள்ளது. போக்குவரத்துகள் - யாழ்.குடாநாட்டில் நடைபெறும் பகிஷ்கரிப்பின் காரணமாக முற்றாக ஸ்தம்பிதம் அடையும் நிலையிலுள்ளதுடன், இராணுவ சோதனை நடவடிக்கைகளும் தீவிரமாக உள்ளது.

கல்லூரியைச் சுற்றி இராணுவ சோதனை நடவடிக்கைகளும் தீவிரமாக உள்ளது. எமது கல்லூரியின் படவரைஞர் கற்கைநெறி மாணவன் கடந்த 20 ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக வளாகத்திற்குள் வைத்து இராணுவத்தினராலும் பொலிஸாராலும் கைதுசெய்யப்பட்டு, தாக்கப்பட்டு இயல்புநிலையில்லாத காரணத்தாலும் கை கால்கள் பலத்த காயமுற்ற நிலையில் இருப்பதாலும் அந்த மாணவன் இறுதிப்பரீட்சைக்கு சமுகமளிப்பது தொடர்ர்பாகவும் நாம் குழம்பிய நிலையிலுள்ளோம். இவ்வாறான ஒரு சங்கடமான நிலைமை ஏனைய கல்லூரி மாணவர்களுக்கும் ஏற்படும் வாய்ப்பு இன்று உள்ளது. எனவே எதிர்வரும் 26 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள தொழில்நுட்பக் கல்லூரியின் இறுதிப்பரீட்சைகளை ஒட்டுமொத்தமாக ஒத்திவைப்பது என கல்லூரி மாணவர்களாகிய நாம் முடிவெடுத்துள்ளோம்.

யாழ்.குடாநாட்டில் நடைபெறும் அசம்பாவிதம் காரணமாக கல்விகற்கும் மாணவர்களும் ஆசிரியர்களும் மிலேச்சத்தனமாக இராணுவத்தால் தாக்கப்படுவதாலும் காயப்பட்ட எமது மாணவர்கள் மனம் குழம்பிய நிலையில் உள்ளனர். அத்துடன் வீடுகளை, விட்டு மாணவர்களும் ஆசிரியர்களும் வெளியே வரமுடியாத பாரிய அச்சத்துடன் காணப்படுகின்றனர்.

குடாநாடெங்கும் திடீர் திடீரென இராணுவத்தினர் வீதிகளில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு சுற்றி வளைப்புகளை எமது மாணவர்கள் மீது மேற்கொண்டு, மிலேச்சத்தனமான தாக்குதல்களை நடத்துவதாலும் எமது மாணவர்களை கண்டபடி கைதுசெய்து தாம் மாணவர்கள் என அவர்கள் அடையாளம் காட்டிய பின்னரும் மிக மோசமாகத் தாக்கப்படுவதாலும் எமது மாணவர்களின் நிலை பரிதாபகரமாக உள்ளது. இதன் காரணமாக எமது மாணவர்கள் உளநிலை தாக்கப்பட்ட நிலையிலுள்ளனர்.

எமது இறுதிப்பரீட்சை தொடர்பாக யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியமும் மாணவர்களும் எடுத்த தீர்க்கமான முடிவையே தாங்களும் வடக்கு - கிழக்கு வலயம் 04 இல் உள்ள ஏனைய தொழில்நுட்பக் கல்லூரிகளும் எடுத்து எமது குடாநாட்டு நிலையில் ஒரு சுமுகமான முடிவைப் பெற தங்களின் பூரண ஆதரவை வேண்டுகிறோம். எனவே தமிழ் மாணவர்களின் எழுச்சியை வலுப்படுத்தி ஒன்றுதிரண்ட தங்களின் ஆதரவையும் பங்களிப்பையும் வேண்டிநிற்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்.வர்த்தக வங்கிகளின் மட்டுப்படுத்தப்பட்ட சேவை

யாழ்ப்பாணம் —

தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்டதும், திருநெல்வேலியில் அமைந்துள்ளவையுமான வர்த்தக வங்கிகள் மறு அறிவித்தல் வரை வாடிக்கையாளருக்கான அலுவலக நேரத்தை பி.ப 2 மணி வரை மட்டுப்படுத்தியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இந்தத் தீர்மானம் யாழ்.மாவட்ட வங்கியாளர் சங்கத்தினால் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நெடுந்தீவு பிரதான வீதியூடாக இரவில் செல்வதற்குத் தடை!

நெடுந்தீவு —

நெடுந்தீவு பிரதான வீதியில் அமைந்துள்ள கடற்படை முகாம், பொலிஸ் நிலையம் ஆகிய பகுதிகளூடாக இரவில் செல்வதற்கு கடந்த வாரம் முதல் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இந்த வீதியில் சுமார் 100 மீற்றர் நீளமான பகுதியின் இரு மருங்கிலும் வீதித்தடைகள் போடப்பட்டுள்ளன. இரவு 10 மணி முதல் அதிகாலை 5 மணிவரைக்கும் அந்தப் பாதையூடாக பொதுமக்கள் செல்லமுடியாது என்ற அறிவித்தலும் இடப்பட்டுள்ளதுடன், குறித்த நேரங்களில் வீதிக்கு குறுக்கே முட்கம்பி வேலிகளும் போடப்பட்டு வீதி மூடப்பட்டுள்ளது.

இந்த வீதியை இரவு வேளைகளில் கடற்படையினர் மூடுவதால் இப்பகுதி மக்கள் அவசர தேவைகளுக்காக வைத்தியசாலைக்கு செல்லமுடியாதிருப்பதாக அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (113)

# படையினரின் தாக்குதலில் குடும்பஸ்தர் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம் —

யாழ்.நகரில் புதன்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தைத் தொடர்ந்து, நாவலர் வீதியால் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் இராணுவத்தினரின் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அரியாலையைச் சேர்ந்த வைத்தி செல்லையா (வயது 28) என்பவரே படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்தவராவார்.

உறவினர் வீடு ஒன்றுக்கு சென்றுவிட்டு தனது பிள்ளைகளுடன் வந்துகொண்டிருந்தபோது, வீதியில் நின்ற படையினர் மூர்க்கத்தனமாகத் தாக்கியதுடன், அடையாள அட்டையைக் காட்டுமாறும் கேட்டனர். அடையாள அட்டையை சட்டைப்பையிலிருந்து எடுக்கமுற்பட்டபோது அருகில் நின்ற ஏனைய படையினர் சைக்கிளிலிருந்து இழுத்து வீழ்த்தி கடுமையாக தாக்கிவிட்டுச் சென்றதாகத் தெரியவருகிறது.

இதன் பின்னர் தாக்குதலுக்கு இலக்காகியவர் பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு அருகிலுள்ள வீடு ஒன்றில் தங்கிவிட்டு நேற்றுக் காலை யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.



நேற்றுமுன்தினம் படுகொலை செய்யப்பட்ட நாட்டுப்பற்றாளர் கிருஷ்ணர் நவரத்தினத்தின் இறுதிக்கிரியை நேற்றுநடைபெற்றது.

# பெண் போராளி விபத்தில் சாவு

யாழ்ப்பாணம் —

தவறுதலான விபத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பெண் போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

யாழ்.அராலியை சொந்த முகவரியாகவும் குளக்கட்டு வீதி, உடையார்கட்டு தெற்கு, உடையார்கட்டை தற்போதைய முகவரியாகவும் கொண்ட கப்டன் முல்லை என்று அழைக்கப்படும் ஜெயபாலன் தமிழினி (தயா) என்ற போராளியே சாவடைந்தவராவார். சாவடைந்த போராளி கப்டன் முல்லைக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

# குடாநாட்டுக்கான பஸ் சேவை இரவு 7.30 மணிவரையும்!

யாழ்ப்பாணம் —

யாழ்.குடாநாட்டின் அனைத்து பிரதேசங்களுக்குமான பஸ் சேவை இன்று முதல் 7.30 மணிவரை மட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக இலங்கை போக்குவரத்து சபையின் யாழ்.சாலை செயலாற்று முகாமையாளர் சி.கமலநாதன் தெரிவித்தார்.

இதுவரை காலமும் யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் இருந்து குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் 8.15 மணிவரையும் பஸ் சேவை நடைபெற்றுவந்தது. தற்போது குடாநாட்டில் ஏற்பட்டிருக்கும் நிலைமையைக் கருத்திற்கொண்டு இந்த நேரம் தற்காலிகமாக மாற்றப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.


நிறைஞ்சனாஸ் சங்கானை
விக்ரம், லைலா மற்றும் பலர் நடித்த
சாமுராய்
காட்சிகள் 11.00, 2.45, 5.00 (புதிய நேரம்)

மனோகரா யாழ்ப்பாணம்
இந்தியா இலங்கை ஒரேதின வெளியீடாக
சூரியா, திரிஷா, வடிவேல், நடித்த
DIGITAL dts SOUND ஒலிநயத்துடன்



ஆறு
காட்சிகள்
10.30, 1.30, 4.30, 7.30, 10.30

ராஜா யாழ்ப்பாணம்
விஜய், ஜோதிகா, விவேக் நடித்த



திருமலை
காட்சிகள்:-10.30,2.30, 6.30 , மட்டும் (பு.நேரம்)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
பிரசன்னா, லைலா, பிரகாஷ்ராஜ் மற்றும் பலர் நடித்த
கண்ட நாள் முதல்
காட்சிகள்;- 10.30, 2.00, 5.15, 8.15, (புதிய நேரம்)

சுன்னாகம் நாகம்ஸ்
கடைசி வாரமாக
அக்ஷன் கிங் அர்ஜுன், நமிதா மற்றும் பலர் நடித்த
ஆணை
இன்று முதல் காட்சி நேரங்கள் தற்காலிகமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
காட்சிகள்:- காலை 10.00 ,1.00, 3.30, 6.00 (பு.நே)



## பணியாளர் தேவை

எமது நிறுவனத்தில் கீழ்வரும் பணிநிலைக்கு பொருத்தமான பணியாளர்கள் தேவை

**கணினி இயக்குனர்கள்**
D.T.P பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்திருக்கவேண்டும்.

**பைன்ரர் (பயிலுனர்)**

**ஓவ்செற் இயந்திர இயக்குனர் (பயிலுனர்)**

தகுதியானவர்கள் 05.01.2006 க்கு முன் கிடைக்கக்கூடியவாறு தங்கள் விண்ணப்பங்களை அனுப்பவும்.

(2147)

திருச்செல்வம் அச்சகம்
110, யாழ்.வீதி, மானிப்பாய்.



பண்டிகையை முன்னிட்டு
விஷேட வெகுமதி
என்றும் பயணத்தின் உதவியாளன்
DAIDO
52,900.00
CF 90C 4 Gear இன் சிறப்புகள்
எரிபொருள் சிக்கனம்,
குறைந்தளவு தேய்மானம்,
கூடிய உத்தரவாதத்துடன்,
தேவையான அளவு உதிரிப்பாகங்களைப்
பெற்றுக்கொள்ளலாம்.




செரெண்டிப் மோட்டர் என்ரபிறைஸ், (பிறைவேட்) லிமிட்டெட்.
60B, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-10.
தொலைபேசி: 0112-341580, 0112-341581,
பக்ஸ்: 0112-454608, E.mail: zme@slt.lk

# சிறிய காட்டுப் பகுதிகளை வைத்துக்கொண்டு தாயகம் என்று கூறுகிறார்களாம் புலிகள்

## விமல் ரத்னாயக்க கூறுகிறார்

கொழும்பு —

வடக்கு - கிழக்கில் சிறிய காட்டுப் பகுதிகளைப் பிடித்து வைத்துக்கொண்டு எமது தாயகம் என்கிறார்கள் விடுதலைப் புலிகள் என்கிறார்கள் விடுதலைப் புலிகள் என்று ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் ரத்னாயக்க கூறியுள்ளார்.

இது தொடர்பாக நாடாளுமன்றில் விமல் இரத்னநாயக்க பேசியதாவது -

புலிகள் குறித்தும், புலிகளின் பிரதிநிதிகளாக நாடாளுமன்றத்தில் செயற்படும் நபர்களின் தவறான செயற்பாடுகள், கருத்துக்களை அம்பலப்படுத்துவது வெளிவிவகார அமைச்சின் பெரும் பொறுப்பாகும்.

அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பயங்கரவாதத்திற்கு துணை போகும் நிதி வழங்குதலுக்கு எதிரான சட்டத்தைக் கடுமையாக அமுல்படுத்த வேண்டியது அவசியமாகும்.

பிரான்சில் இருந்து பல லட்சம் ரூபா புலிகளுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

இவற்றைத் தடுக்க உரிய வழிவகைகளை முன்னெடுக்குமாறு புதிய வெளிவிவகார அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

புலிகளுக்குச் சர்வதேச பலம் என்பது அத்தியாவசியமாகவுள்ளது. இதனையே புதிய இராணுவத் தளபதியும் வலியுறுத்தியுள்ளார்.

எமது நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினையை சர்வதேச மயப்படுத்தியது பெரும் தவறாகும். தேவைக்கு அதிகமாகவே இந்த நிகழ்வு நடைபெற்றுவிட்டது.

சூடான், சைபிரஸ் போன்ற நாடுகளில் உள்நாட்டுப் பிரச்சினைகள் சர்வதேச மயப்படுத்தப்பட்டுள்ளதால் ஏற்பட்ட விளைவுகளானது எமக்கும் சிறந்த படிப்பினையாகும்.

வடக்கு - கிழக்கில் இருக்கும் சிறிய காட்டுப் பகுதிகளைப் பிடித்து வைத்துக் கொண்டு இதுதான் எமது தாயகம் என்று புலிகள் கூறுவதைச் சில சமாதானக் காகங்கள் பெரிதாக எடுத்துக் கொண்டு சர்வதேச ரீதியில் பெரும் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றன.

இந்தியக் கூட்டாட்சி முறையிலான அதிகாரப் பகிர்வு சிறிலங்காவுக்கு ஒருபோதும் பொருந்தாது.

இந்த அதிகாரப் பகிர்வு முறை இலங்கைக்கு ஏற்றது என்று பலரும் கூறுகின்றனர்.

உலகில் 5 ஆவது பெரிய இராணுவப் பலத்தை இந்தியா கொண்டுள்ளது.

பாரிய தேச பக்தி இயக்கத்தை அவர்கள் கட்டியெழுப்பியுள்ளனர். இந்தத் தகுதிகள் எதுவும் இலங்கைக்கு இல்லை.

இந்த நிலையில் இந்தியக் கூட்டாட்சி முறையை அவ்வாறே ஏற்றுக் கொள்வது அர்த்தமற்றது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் விடுதலைப் புலிகளைத் தடை செய்யும் நடவடிக்கைகளைப் புதிய வெளிவிவகார அமைச்சு மும்முரமாக முன்னெடுத்தல் அவசியம்.

# தமிழ் ஊடக சுதந்திரத்தை அடக்கும் அரசுக்குக் கண்டனம்

## சர்வதேச ஊடகவியலாளர்கள்

கொழும்பு —

யாழ்ப்பாணத்தில் ஊடக சுதந்திரத்தை அரசாங்கம் ஒடுக்கிவருவதற்குச் சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்புக் கண்டனம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் ஊடகத்துறையினரை அரசாங்கம் குறிவைத்துத் தாக்கி வருவதை அண்மைய நிகழ்வுகள் சுட்டிக் காட்டுகின்றன என்று அந்த அமைப்புக் கூறியுள்ளது.

இராணுவத்தினரால் டிசம்பர் மாதம் தொடக்கத்தில் மூன்று ஊடகவியலாளர் தாக்கப்பட்டனர். அதன் பின்னர் மூன்று ஊடகவியலாளர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் உரிய அடையாள அட்டைகள், ஊடகவியலாளர்கள் அடையாள அட்டைகளைக் காட்டிய போதும், அதை ஏற்காமல் கைது செய்யப்பட்டனர். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தலையீட்டுக்குப் பின்னரே அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

யாழ். குடாநாட்டிலிருந்து வெளியாகும் 'நமது ஈழநாடு' என்ற தமிழ் நாளிதழின் அலுவலகத்துக்குள் முன் அனுமதியின்றி நுழைந்த இராணுவம், சோதனையிட்டுள்ளது. இந்த மூன்று சம்பவங்களும் யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களை அரசாங்கம் இலக்கு வைக்கத் தொடங்கியுள்ளது என்றும் கருத்துச் சுதந்திரத்தை முழுவதுமாகச் சிதைக்கின்ற நிலைமைதான் எதிர்காலத்தில் உருவாகும் என்றும் சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பின் தலைவர் கிறிஸ்டோபர் வாரென் தெரிவித்துள்ளார்.

மேலும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவிப்பதால் நான்கு தமிழ் நாளிதழ்களும், யாழ்ப்பாணத்தில் அரசாங்கத்தால் இலக்கு வைக்கப்பட்டுள்ளன என்றும் சர்வதேச கூட்டமைப்பு தனது அறிக்கையில் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் ஆயுதக் குழுக்களுடன் எந்தத் தொடர்பும் கிடையாது

## இணைத் தலைமை நாடுகளுக்கு அரசாங்கம் தெரிவிப்பு

கொழும்பு —

தமிழ் ஆயுதக்குழுக்களுடன் அரசாங்கமோ அல்லது இராணுவமோ எந்தத் தொடர்பையும் கொண்டிருக்கவில்லை என்று உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகள் பிரஷெல்ஸ் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை .மறுப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சிங்கள பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருப்பதாவது -

இலங்கையில் வடக்கு - கிழக்கில் வன்முறைகள் அதிகரிப்பதற்குக் காரணம் ஆயுதக்குழுக்களின் செயற்பாடுகள் என்று பிரஷெல்ஸில் நடைபெற்ற உதவி வழங்கும் இணைத்தலைமை நாடுகளின் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், தமிழ் ஆயுதக் குழுக்களுடன் அரசாங்கமோ, இராணுவமோ எவ்வித தொடர்புகளையும் கொண்டிருக்கவில்லை. அதனால், உதவி வழங்கும் நாடுகள் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்களை மறுப்பதாகவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகளே அசம்பாவித நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும், கடந்த நவம்பர் மாதத்திலிருந்து அவர்கள் 44 முறை யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீறியிருப்பதாகவும் அரச தரப்பு கூறுகிறது.

மேலும், கடந்த 18 ஆம் திகதியிலிருந்து விடுதலைப் புலிகள் 20 படையினரை படுகொலை செய்துள்ளதுடன், 17 கைக்குண்டுத் தாக்குதல்களையும் நடத்தியுள்ளனர்.

2002 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கமைய - புளொட், ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகியவற்றின் ஆயுதங்கள் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டிருப்பதாகவும் அரசாங்கப் பேச்சாளர் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் ஒரு அங்கம் என்பதால் கருணா குழு விடயத்தை விடுதலைப் புலிகளின் தலைமையே ஏற்கவேண்டும் என்று அரசாங்கம் உதவி வழங்கும் நாடுகளுக்கு அறிவித்திருப்பதாகவும் அந்தப் பத்திகை மேலும் செய்தி வெளியிட்டுள்ளது.

# இந்தியாவுக்கான விமானசேவை; மூன்று நிறுவனங்களுக்கு அனுமதி!

கொழும்பு —

இந்தியாவுக்கான விமான சேவைகளை மூன்று உள்நாட்டு நிறுவனங்கள் மேற்கொள்வதற்கு அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.

இந்த மூன்று விமானசேவைகளும் ஆறுமாத காலத்திற்குள் இந்தியாவிற்கான சேவையைத் தொடங்க வேண்டுமென சிவில் விமான சேவைகள் அதிகார சபையால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து 52,434 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர். இந்த புதிய சேவைகளின் மூலம் மேலும் பல சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவார்கள் என்ற எதிர்பார்ப்பில் இந்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்தியாவிற்கான விமானக் கட்டணங்களும் குறைவடையக் கூடும் என்று சிவில் விமான அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# கடற்படையினரை மீட்பதற்கு சர்வதேசம் உதவ வேண்டும்!

## அரசாங்கம் வேண்டுகோள்

மன்னார் —

மன்னாரில் கடற்படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலை அரசாங்கம் கண்டிப்பதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் -

நேற்றுக்காலை மன்னார் கடற்பரப்பில் இடம்பெற்ற சம்பவத்தில் சுமார் பத்து படகுகளில் வந்த விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தி மூன்று கடற்படையினரை பணயக் கைதிகளாகப் பிடித்துச் சென்றனர். இந்தச் சம்பவத்தில் கடற்படை வீரரொருவர் காயமடைந்தார்.

போர்நிறுத்த உடன்படிக்கையின் 1.3 ஆவது சரத்தின் கீழ் இந்தச் சம்பவ போர் நிறுத்த உடன்படிக்கை மீறல் செயலாகும். பணயக் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்ட மூன்று கடற்படையினரையும் விடுவிக்க போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் உதவி நாடப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகள் வன்முறைகளில் ஈடுபடுகின்ற போதிலும், படையினர் தமது கடப்பாடுகளை மதித்து நடக்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தச் சம்பவமானது, போர் நிறுத்த உடன்படிக்கை மீறலாகப் பதிவு செய்யப்பட்டு, வெளிவிவகார அமைச்சர் ஊடாக இணைத் தலைமை நாடுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.


இத்தகைய ஆத்திரமூட்டல் நடவடிக்கைகள் அல்லது தாக்குதல்கள் விடுதலைப் புலிகளால் நாளாந்தம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரசாங்கத்தின் சகிப்புத்தன்மையை சோதித்துப் பார்க்கிறார்கள். குறிப்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைதிப் பேச்சுக்களை முன்னெடுக்க உள்ள நிலையில், இந்தச் செயற்பாடுகளை புலிகள் மேற்கொண்டுள்ளனர்.

கடந்த டிசம்பர் 19ஆம் திகதியன்று இணைத்தலைமை நாடுகள் விடுத்திருந்த அறிவுறுத்தல் அறிக்கையை விடுதலைப் புலிகள் நிராகரித்திருப்பது வருத்தத்துக்குரியது. இது விடயத்தில் விடுதலைப் புலிகளுக்கு மேலதிக அழுத்தம் கொடுத்து மூன்று கடற்படையினரை மீட்க சர்வதேச சமூகம் முன்வர வேண்டும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இராணுவ பிரதி தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க நியமனம்

கொழும்பு —

வன்னி படைத் தலைமையகக் கட்டளை அதிகாரியாக இருந்த மேஜர் ஜெனரல் பி.எஸ்.பி.குலதுங்க நேற்றுமுன்தினம் பிரதி இராணுவத்தலைமை அதிகாரியாகப் பதவியேற்றார்.



இராணுவத்தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பதவியேற்பு நிகழ்வில் மேஜர் ஜெனரல் அபேரத்ன, பிரிகேடியர் பண்டார, பிரிகேடியர் தேரதெனிய, பிரிகேடியர் டி சில்லா, பிரிகேடியர் சூரியாராச்சி உள்ளிட்ட உயரதிகாரிகள் பலரும் பங்கு பற்றினர்.

34 வருடகாலம் இராணுவத்தில் பணியாற்றிய இவர் - யாழ். படைத்தலைமையக பொது அலுவலர்களுக்கான இயக்குநர், கொத்தலாவல பாதுகாப்பு கல்லூரி பிரதி தளபதி உள்ளிட்ட முக்கிய பதவிகளை வகித்தார்.

1971 ஜூலை 20ஆம் திகதி இராணுவத்தில் இணைந்த இவர் கெமுனு வோர்ச் பற்றாலியனில் 1972 ஒக்ரோபர் 14 ஆம் திகதி 2ஆம் லெப்டினன்ட் தர அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

அலுவலக அதிகாரி பொது அலுவலக அதிகாரி, பொது அலுவலக கேணல், பிரிகேட் தளபதி, பிரதி பொதுக் கட்டளை அதிகாரியாகப் பதவி வகித்தபின்னர், 1996 ஆம் ஆண்டில் இராணுவத் தலைமையக பிரதி அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

மிருசுவில், ஆனையிறவு பிரதிக் கட்டளை உயரதிகாரியாக 1997, 1998 காலப்பகுதிகளில் பணியாற்றிய இவர் 52 ஆவது டிவிசன் தளபதியாக 2000-2001 களில் பணியாற்றினார்.

பின்னர் பனாகொட 11 ஆவது டிவிசன் தளபதியாக பொறுப்பேற்ற இவர் 2003.07.21 திகதி யாழ்.படைத் தலைமையகத் தளபதியாகப் பொறுப்பேற்றார்.

2003 செப்ரெம்பர் 06 திகதி இராணுவத் தலைமையகப் பொது அலுவலக அதிகாரியாக நியமிக்கப்பட்ட இவர் 2004 ஓகஸ்ட் 10 ஆம் திகதி வன்னிப் படைக் கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

அமெரிக்காவில் சர்வதேச இராணுவக் கல்வி மற்றும் பயிற்சி நெறிகளைப் பயின்ற இவர் இந்தியாவில் சிரேஷ்ட அதிகாரி கற்கைநெறி, இந்தியாவில் புலனாய்வு அதிகாரி கற்றை நெறி மற்றும் வெளிநாடுகளில் நடைபெற்ற இராணுவக் கருத்தரங்குகள் குறிப்பாக அமெரிக்காவில் நடைபெற்ற விசேட நடவடிக்கை கருத்தரங்கு உள்ளிட்டவற்றில் பங்கேற்றவராவார்.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவரின் கல்வி இயல்புக்குத் திரும்பவில்லை!

## குழந்தைகள் பாதுகாப்பு நிதியம் குற்றச்சாட்டு

கொழும்பு —

இலங்கையில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் உள்ள மாணவர்களுக்கு கல்வியூட்டல் நடவடிக்கைகள் இன்னும் இயல்பு நிலைக்குத் திரும்பவில்லை என குழந்தைகள் பாதுகாப்பு நிதியம் குற்றம் சாட்டியுள்ளது.

இந்த அமைப்பினர் யாழ்ப்பாணம், ஹம்பாந்தோட்ட, காலி மற்றும் அம்பாறை ஆகிய இடங்களில் சுமார் 230 மாணவர் மத்தியில் நடத்திய ஆய்வின் போது அதில் பெரும்பாலானோருக்கு இன்னும் உரிய ஆசிரியர்கள் இல்லை என்ற விடயம் தெரியவந்துள்ளது.

அத்துடன், அடிப்படைக் கல்வி வசதிகளும் செய்துகொடுக்கப்படவில்லை என அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருட சுனாமி அனர்த்தத்தின்போது, நாடளாவிய ரீதியில் 3372 மாணவர்கள் பலியாகினர்.

6610 மாணவர்கள் அவயவங்களை இழந்துள்ளனர்.


50 ஆயிரம் பேர் வரை தமது இருப்பிடங்களைவிட்டு வெளியேறியுள்ளனர்.


126 ஆசிரியர்கள் பலியாகியுள்ள அதேநேரம், 331 ஆசிரியர்கள் தமது அவயவங்களை இழந்துள்ளனர்.

180 பாடசாலைகள் சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ளன. 446 பாடசாலைகள் இடம்பெயர்ந்த மக்களின் முகாம்களாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

# போதை மருந்து பயன்படுத்திய வோன் எப்படி முன்னுதாரணமாக முடியும்?

## கேலி செய்கிறார் அர்ஜுன ரணதுங்க





கொழும்பு—

முரளிதரனை சீண்டிப் பார்த்த ஷேன் வோனுக்கு ரணதுங்க காட்டமான பதிலடி கொடுத்துள்ளார். ஊக்க மருந்து சர்ச்சையில் சிக்கிய வோன், இளம் வீரர்களுக்கு எப்படி முன்மாதிரியாக இருக்கமுடியுமென வெளிப்படையாகக் கேட்டுள்ளார்.

அவுஸ்ரேலிய சுழல் மன்னன் ஷேன் வோன் சர்ச்சைகளில் சிக்குவது சாதாரணம். இவர் தனக்கு போட்டியாக விளங்கும் இலங்கையின் சுழல் நாயகன் முரளிதரன் மீது மறைமுகமாக குற்றம் சாட்டியிருக்கிறார்.

சிலர் குட்டி அணிகளுக்கு எதிராக அதிக விக்கெட் வீழ்த்துகின்றனர். இதனால் எனது அதிக விக்கெட் டெஸ்ட் சாதனை (651), ஒரே ஆண்டில் அதிக விக்கெட் (87) போன்றவை விரைவாக முறியடிக்கப்பட்டுவிடும். நான் இதுவரை பங்களாதேஷுக்கு எதிராக விளையாடவே இல்லை. சிம்பாப்வேயுடன் ஒரு டெஸ்ட் போட்டியில்தான் ஆடியுள்ளேன். ஆக, வலிமைமிக்க அணிகளுக்கு எதிராக மட்டுமே விக்கெட் வீழ்த்தியுள்ளேன் என பெருமை பேசினார் வோன்.

இவர் முரளிதரனைத்தான் குறை கூறினார் என்பது தெளிவாகத் தெரிந்தது. ஏனென்றால், குட்டி அணியான சிம்பாம்வேக்கு எதிராக முரளி 89 விக்கெட் வீழ்த்தியுள்ளார். இதே போல் பங்களாதேஷுக்கு எதிராக 34 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். இந்த மறைமுக புகாரை கேட்டு கொதித்துப் போயுள்ளார் இலங்கை அணியின் முன்னாள் கப்டன் ரணதுங்க. இது குறித்து அவர் கருத்து வெளியிடுகையில் -

வோன் எப்போதும் பெருமை பேசுவார். தன்னைக் காட்டிலும் சிறந்த பந்துவீச்சாளர் இல்லை என்ற நினைப்பில் இருப்பார். இவர் சொல்வது எல்லாம் தவறு. இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, நியூஸிலாந்து போன்ற அணிகள் சுழற்பந்துவீச்சை எதிர்கொள்ள சிரமப்படும். எனவே, இந்த அணிகளுக்கு எதிராக விக்கெட் வீழ்த்துவது பெரிய விடயமல்ல. புள்ளிவிபரத்தைப் பார்த்தால், இங்கிலாந்து (172), தென்னாபிரிக்கா (107), நியூஸிலாந்து (103) அணிகளுக்கு எதிராகத்தான் வோன் சிறப்பாகச் செயற்பட்டுள்ளார்.

அதே நேரத்தில் சுழற்பந்துவீச்சை நன்கு விளையாடும் இந்தியாவுக்கு எதிராக 43 விக்கெட்டுக்களைத்தான் வீழ்த்தியுள்ளார். அனால், முரளிதரனோ இந்தியாவுக்கு எதிராக 73 விக்கெட்டுக்களை அள்ளியுள்ளார். இதை வைத்தே திறமையானவரை கண்டறியலாம். தவிர வோனின் சொந்த வாழ்க்கை சர்ச்சை நிறைந்தது.

2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ண போட்டியின்போது - ஊக்க மருந்து பயன்படுத்தியதற்காக ஒரு ஆண்டு தடையைச் சந்தித்தார். இப்படிப்பட்ட ஒருவரை இளம் வீரர்கள் பின்பற்ற முடியுமா? இலங்கை வீரர்கள் யாரும் இவரை முன்மாதிரியாகக் கொள்ளக்கூடாது. இவ்வாறு ரணதுங்க எச்சரித்துள்ளார்.

# இலங்கை அணியில் மீண்டும் ஜெயசூர்ய சேர்க்கப்பட்டார்



கொழும்பு

இலங்கை அணியில் ஜெயசூர்ய மீண்டும் இடம்பிடித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் அதிரடி தொடக்க ஆட்டக்காரர் ஜெயசூர்ய, மோசமான நிலை காரணமாக இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் நீக்கப்பட்டார். டெஸ்ட் தொடரில் இலங்கை 2-0 என தோல்வியைத் தழுவியது. இதைத் தொடர்ந்து நியூஸிலாந்து செல்லும் அணியில் அவர் சேர்க்கப்பட்டுள்ளார்.

இலங்கை அணி நியூஸிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது. டெஸ்ட் போட்டிகளில் சிறப்பாக விளையாடிய பண்டார, மலிங்க, முபாரக் ஆகியோர் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

தொடரில் சோபிக்காத சமரவீர நீக்கப்பட்டுள்ளார். முதல் ஒருநாள் போட்டி கிறிஸ்ட்சேர்ச் நகரில் எதிர்வரும் 31ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இலங்கை அணி -

அத்தபத்து (கப்டன்), வாஸ், ஜெயசூர்ய, டில்ஷான், பண்டார, மலிங்க, முரளிதரன், பெர்னாண்டோ, ஜெயவர்த்தன, தரங்க, சங்ககார, மஃரூப், குணவர்த்தன, முபாரக், ஆர்னோல்ட், ருச்சித பெரேரா.

# ரெனிஸ் வீரர் பியூர்டாவுக்கு எட்டு வருடத் தடைவிதிப்பு

லண்டன்—

ஆஜென்ரீனாவைச் சேர்ந்த ரெனிஸ் வீரர் மரியானோ பியூர்டாவுக்கு 8 ஆண்டுகள் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஊக்கமருந்து உட்கொண்டு விளையாடியதற்காக அவருக்கு இந்தத் தண்டனையை அளித்துள்ளது சர்வதேச ரெனிஸ் சம்மேளனம்.


கடந்த ஜுலை நடைபெற்ற பிரெஞ் ஓபன் போட்டியில், ராபல் நடாலிடம் இறுதிச் சுற்றில் தோற்றுப் போனார் 27 வயதாகும் மரியானோ பியூர்டா.

போட்டி முடிவுற்றதும் அவரிடம் மேற்கொள்ளப்பட்ட சிறுநீர் பரிசோதனையில் தடை செய்யப்பட்ட ஊக்க மருந்தை பயன்படுத்தியுள்ளது தெரிய வந்துள்ளது.

2ஆவது முறையாக அவர் ஊக்க மருந்து பிரச்சினையில் சிக்கியதால் அதிகமான தண்டனை வழங்கப்படுகிறது. இதற்கு முன்னதாக 2003இல் இதே குற்றத்துக்காக 9 மாதம் விளையாடத் தடையைப் பெற்றார்.

பிரெஞ் ஓபன் இறுதிப் போட்டி நடைபெற்ற ஜுன் 5 முதல் அவரது தடைக் காலம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. இதையடுத்து, அவரது ரெனிஸ் வாழ்க்கை முடிவு பெறுவது உறுதியாகியுள்ளது.

# இலங்கையுடனான போட்டி; அஸ்ரில், மக்மிலன் நீக்கம்



வெலிங்ரன்—

இலங்கை அணியுடன் நடைபெறவுள்ள முதல் 2 ஒருநாள் போட்டிகளுக்கான நியூஸிலாந்து அணியிலிருந்து நதன் அஸ்ரில் மற்றும் கிரேக் மக்மிலன் ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

அஸ்ரில் கடந்த 7 ஒருநாள் போட்டிகளில் மொத்தம் 102 ஓட்டங்களையே பெற்றிருந்ததாலும், மக்மிலன் அவுஸ்ரேலிய அணிக்கெதிரான 3 ஒருநாள் போட்டிகளில் 20 ஓட்டங்களையே பெற்றதாலுமே அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். இவர்கள் உள்ளூர் போட்டிகளில் விளையாடி தமது திறமையை மீளமைத்துக் கொள்ள வேண்டுமென பயிற்சியாளர் கிரேஸ்வெல் தெரிவித்தார்.

இறுதியாக நடந்த 10 ஒருநாள் போட்டிகளில் நியூஸிலாந்து அணி 7 போட்டிகளில் தோல்வியுற்றமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை இலங்கை அணியுடனான முதல் இரு போட்டிகளுக்குமான அணியில் பீற்றர் புல்ற்றன் (வயது 26) மற்றும் ஜெமி ஹோ (வயது 24) ஆகியோர் அறிவிக்கப்பட்டுள்ளனர்.


அத்துடன் சகலதுறை ஆட்டக்காரரான அன்ட்ரூ அடம்ஸ் மற்றும் வேகப் பந்து வீச்சாளர் ஷேன் பொண்ட் ஆகியோர் காயங்களிலிருந்து மீண்டு அணிக்குத் திரும்பியுள்ளனர்.

நியூஸிலாந்து அணி -

ஸ்ரீபன் பிளெமிங், அன்ட்ரே அடம்ஸ், ஷேன் பொண்ட், கிறிஸ் கெயின்ஸ், பீற்றர் புல்ற்றன், ஜெமி ஹோ, ஹமிஸ் மார்ஷல், பிரண்டன் மக்கலம், கெயில் மில்ஸ், ஜேக்கப் ஓரம், ஸ்கொட் ஸ்ரைரிஸ், டானியல் விற்றோரி, லூ வின்சென்ட்.

# முன்வரிசை வீரர்களின் ஆட்டம் கவலை அளிப்பதாக உள்ளது

## இந்திய அணி கப்டன் ஷேவாக்



அகமதாபாத்—

இலங்கையுடனான தொடரை 2-0 என வென்றாலும் அணியின் முன்வரிசை வீரர்களின் ஆட்டம் கவலையளிப்பதாக இந்திய அணியின் கப்டன் வீரேந்தர் ஷேவாக் கூறினார்.

ராகுல் ராவிட்டுக்கு உடல் நலமில்லாத காரணத்தால் அணியை வழி நடத்திய ஷேவாக், 3ஆவது போட்டி வெற்றிக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் கூறுகையில் -

அகமதாபாத் போட்டியில் தொடக்க ஜோடியின் ஆட்டம் ஏமாற்றம் அளிக்கும் விதத்தில் உள்ளது. ஆனால், இதற்கு முன்னதாக வெளிநாடுகளில் விளையாடிய போட்டியில் இந்தியாவின் தொடக்க ஜோடியின் ஆட்டம் சிறப்பாகவே இருந்துள்ளது.

பாகிஸ்தானுக்கு எதிராக அடுத்து நடைபெறும் தொடரில் முன்வரிசை வீரர்களின் ஆட்டம் மேம்பாடு அடையுமென நம்புகிறேன்.

ஒட்டுமொத்த அணியினரின் ஆட்டமே தொடர் வெற்றிக்குக் காரணம்.

கும்ளே, ஹர்பஜன் ஆகியோரது ஆட்டம் அற்புதமாக இருந்தது. விக்கெட் வேட்டையில் அவர்கள் இறங்கிவிட்டால் யாரும் அவர்களது வீச்சை சமாளிக்க முடியாது என்றார் ஷேவாக்.

# பிறேசில் விமான நிலையத்தில் டியாகோ மரடோனா கைதானார்

றியோ டி ஜெனிரோ—




உதைபந்தாட்ட ஜாம்பவான் டியாகோ மரடோனா நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.

ஆஜென்ரீன அணிக்கு 1986இல் உலகக் கிண்ணத்தைப் பெற்றுக் கொடுத்தவர் மரடோனா. போதை மருந்துக்கு அடிமையான இவர், தற்போது அந்தப் பழக்கத்தில் இருந்து மீண்டு வருகிறார். இந்தச் சூழலில் கண்காட்சி நலநிதி போட்டியில் பங்கேற்பதற்காக மரடோனா பிறேஸில் சென்றார்.

போட்டி முடிந்து தாயகம் திரும்புவதற்காக றியோ டி ஜெனிரோ விமான நிலையத்துக்கு வந்தபோது அங்கு விமானத்தை தவறவிடவே கடுமையாக ஆத்திரப்பட்டுள்ளார். விமான நிலைய ஊழியர்கள், பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

பிரச்சினை பெரிதாகவே மரடோனா கைது செய்யப்பட்டார். இவர் போதை மருந்து ஏதாவது உட்கொண்டாரா என்பது பற்றி விசாரணை நடத்தப்பட்டது. பின்னர் இவர் விடுவிக்கப்பட்டார்.

# அஜாக்கிரதையாக ஆடியதால் இலங்கை அணி தோல்வியுற்றது

## பயிற்சியாளர் ரொம் மூடி

விளையாட்டு



அகமதாபாத்—

ஒவ்வொரு டெஸ்டிலும் ஓரிரு தினங்கள் அஜாக்கிரதையாக ஆடியதால் இலங்கை அணி தோல்வியுற்றது. ஆனால், மோசமாகத் தோற்கவில்லையென இலங்கை அணியின் பயிற்சியாளர் ரொம் மூடி கூறினார்.

அகமதாபாத்தில் நடைபெற்ற 3ஆவது டெஸ்ட் போட்டியில் அணி தோல்வியுற்றதும், நிருபர்களிடம் அவர் மேலும் கூறியதாவது -

தோல்வியுற்ற 2 போட்டிகளிலும் வீரர்கள் போராட்டத்தை வெளிப்படுத்தினர். ஆனால் முன்னேற்றம் காண வேண்டிய நேரத்தில் அஜாக்கிரதையாக இருந்துவிட்டனர். அந்த நேரத்தில் இந்திய அணியினர் சிறப்பாக ஆடிவிட்டனர். எமது வீரர்கள் 5 தினங்களும் சீராக விளையாடாதது, தொடரை இழந்ததற்கு முக்கிய காரணம்.

இந்தப் போட்டியின் முதல் இனிங்ஸில் 97-5, இரண்டாவது இனிங்ஸில் 100-5 என்ற நிலைக்கு இந்திய அணி தள்ளப்பட்டது. அம்மாதிரியான தருணத்தில் ஆட்டத்தை முடித்துக் காட்டும் வலிமை கொண்ட வீரர் இல்லாதது துரதிஷ்டமாக அமைந்தது.

அதே சமயம் இந்தத் தொடரில் நாங்கள் தூக்கி எறியப்படவில்லை. போராடியே தோற்றோம்.

இந்தியாவுடனான தொடரை 0-2 என இழந்துள்ளோம். ஆனால், பல்வேறு முன்னேற்றங்களை அணியினர் பெற்றுள்ளனர். தவறுகளை திருத்திக் கொள்வதற்கு வாய்ப்பாக இந்தத் தொடர் அமைந்துள்ளது என்றார் மூடி.

# சோம்பேறி ராமன்

முன்னொரு காலத்தில் ராமன் என்ற பெயருடைய பையன் தன் தாயாருடன் வசித்துவந்தான். அவனுடைய தாயார் நெசவுத் தொழிலில் ஈடுபட்டு, அதில் பெறும் சொற்ப வருமானத்தில் இருவரும் வாழ்நாளை ஓட்டினார்கள். ஆனால் ராமனோ தாயாருக்கு எந்தவித உதவிகளும் செய்யாமல் சோம்பேறியாகக் காலத்தைக் கழித்துவந்தான். குளிர்காலத்தில் அடுப்புமூலையில் குளிர் காய்ந்தும், கோடையில் இளவெயிலை நாடியும் வந்தான். அதனால் சோம்பேறி ராமன் என்ற பெயரைப் பெற்றான். தாயாரின் வற்புறுத்தல், அச்சுறுத்தல் காரணமாக வெளியே சென்று எங்காவது வேலை செய்யச் சென்றான்.

விவசாயி ஒருவர் அயல் கிராமத்திலிருந்தார். அவர் ராமனை வேலைக்கு அழைத்து சில நாட்கள் வேலை கொடுத்துப் பணத்தையும் கொடுத்துவந்தார். ஆனால் வீட்டுக்கு வரும்போது பணத்தை எங்கேயாவது தொலைத்துவிட்டு வெறுங்கையுடன் வருவான். நீ ஒரு முட்டாள் பையனாக இருக்கிறாயே! என வசைபாடிய தாயார், வாங்கும் பணத் தைச் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டு வரவேண்டுமென்று கூறினார். மறுதடவை அப்படிச் செய்கிறேன் என்றான் அவன்.

அன்று புதன்கிழமை மாட்டுப் பண்ணையாளர் அழைத்ததால், அங்கு வேலைக்குச் சென்றான். வேலை முடிந்ததும், ஒரு கிண்ணம் நிரம்பிய பாலை அன்றைய வேலைக்கான ஊதியமாகக் கொடுத்தார். அதை வாங்கி, தன் நீண்ட சட்டைப் பைக்குள் திணித்துக் கொண்டான். அவன் வீட்டை அடையு முன்பே பையிலிருந்த பாலெல்லாம் உடையில் சிந்திச் சிதறி வீணாகியது. சோம்பேறிக் கழுதையே! தலையில் வைத்தல்லவா அதைக் கொண்டுவரவேண்டும் என்ற தாயாரிடம் மறுதடவை அப்படிச் செய்கிறேன் என்று கூறினான்.

அன்று வியாழக்கிழமை. மற்றொரு விவசாயியிடம் வேலை செய்யச் சென்றான். அவனுக்கு வேலை முடிந்ததும் "கிறீம் சீஸ்" என்ற பாலுணவு வழங்கப்பட்டது. அதை வாங்கித் தன் தலையில் வைத்துக்கொண்டு வீடு வரும்போது, அந்தப் பாலுணவு சிந்தித் தட்டையாகப் பரவி உறைந்தும், மீதமானவை வெளியே வழிந்தோடியும் பாழானது. "இதைக் கண்ட தாய், வடிகட்டிய முட்டாளே! நீ அதை மிகக் கவனமாகக் கையிலல்லவா கொண்டுவந்திருக்க வேண்டும் எனக் கத்தினாள்" அடுத்த தடவை அப்படிச் செய்கிறேன் என்றான் ராமன்.



வெள்ளிக்கிழமையன்று வழமைபோல சோம்பேறி ராமன் வேலைக்குச் சென்றான். பேக்கரி ஒன்றில் வேலை செய்த அவனுக்கு உரிமையாளர் பணம், பொருள் எதையும் கொடுக்காமல், பெரிய பூனையைக் கொடுத்தார். அதைக் கையில் வாங்கி மிகக் கவனமாக வைத்திருந்து வீடுநோக்கிச் சென்றபோது திமிறியடித்த பூனை அவன் கையைக் கடித்து, பிராண்டிக் காயப்படுத்தியதால், அதைப் போக விட்டுவிட்டான். வீடு போய்ச்சேர்ந்ததும், விபரத்தைக் கேட்டறிந்த தாயார், அந்தப் பூனையைக் கயிறொன்றால் கட்டி, பின்னால் இழுத்துக்கொண்டல்லவா வந்திருக்க வேண்டும் என்றதற்கு இன்னொரு தடவை அதைச் செய்வதாக வாக்களித்தான்.

சனிக்கிழமையன்று, அவன் இறைச்சிக் கடைக்காரனிடம் வேலை செய்யச் சென்றான். அவன் ஊதியமாக, ஆட்டின் தோள்பகுதி இறைச்சித் துண்டத்தைக் கொடுத்தான். இறைச்சியை வாங்கிய ராமன் அதைக் கயிற்றால் கட்டி, அழுக்குகள் நிறைந்த பாதைகூடாக இழுத்துச் சென்றான். அழுக்கேறிய நிலையில் காணப்பட்ட இறைச்சி எதற்கும் உதவாமல்போனது. பொறுமையிழந்த தாயார் அவனை வாய்க்கு வந்தபடி தாறுமாறாகத் திட்டினாள். உன் தோளின்மேலாக வைத்துக்கொண்டல்லவா வந்திருக்க வேண்டும் என்ற தாயாரிடம் அடுத்ததடவை அப்படியே செய்வதாகக் கூறினான்.

அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை, அவன் வேலைக்குச் செல்லவில்லை. வெறும் பூனைக்காய் அவியலுடன் சாப்பாடு போடப்பட்டது.

அன்று திங்கட்கிழமை, மந்தைகள் வளர்க்கும் உரிமையாளரிடம் மீண்டும் வேலை செய்யச் சென்றான். இப்போது அவனுக்கு ஒரு கோவேறு கழுதையொன்று ஊதியமாகக் கொடுக்கப்பட்டது. கனமான கழுதையைத் தூக்கமுடியாமல் கஷ்டப்பட்டாலும் ஒருவாறு அதைத் தூக்கி தோளில் தாங்கிக் கொண்டும், கால்களை அகல விரித்துக்கொண்டும் மெதுவான பயணத்தை ஆரம்பித்தான்.

அப்படியாக கழுதையைத் தோளில் சுமந்து கொண்டு வரும் வழியிலேதான் அந்தப் பெரும் பணக்காரரும், அவரது பங்களாவும் இருந்தது. அவரின் ஒரேயொரு மகள் நனிவி வாய் பேசாத ஊமையாகவும், செவிடாகவும் இருந்தாள். அவள் தன் வாழ்நாளில் ஒரு போதும் சிரித்தது இல்லையாம். எவரேனும் அவளைச் சிரிப்பூட்டினால் மட்டுமே அவளால் பேசமுடியும் என வைத்தியர்கள் கூறியிருந்தனர். ராமன் கால்களைக் கோணல் மாணலாக அழுத்தப் பதித்து நடந்ததையும், கழுதையின் கால்கள் வானத்தை நோக்கி நீட்டிக்கொண்டிருந்த கோலத்தையும், அது பல்லிளித்துக் கனைத்ததையும் மேல்மாடி ஜன்னலூடாக அவதானித்துக்கொண்டிருந்த செல்வந்தரின் மகளான நனிவி கண்டாள். அந்தக் காட்சி மிகுந்த சிரிப்புக்கிடமாக இருந்ததால், திடீர் வெடிச்சிரிப்பொன்று பெரும் சத்தத்துடன் அவளிடமிருந்து எழுந்தது. அந்தக் கணமே அவளைப் பீடித்திருந்த காது கேளாமையும், வாய் பேசாமையும் அவளை விட்டு நீங்கியது. இதைக் கண்ட தந்தையார் மிகவும் மகிழ்ச்சியடைந்து, தன் மகளைச் சிரிப்பூட்டி நோயைக் குணப்படுத்தியமைக்காக ஒன்றுக்கும் உதவாதவன் என்ற பெயரெடுத்திருந்த அந்தச் சோம்பேறி ராமனுக்கே தன் மகளைத் திருமணம் செய்து வைத்தான். அவனுக்கிருந்த முட்டாள் தனங்களும், சோம்பேறித் தனங்களும் அறவே அகன்றன. பெரும் செல்வந்தக் கனவானாக விளங்கிய அவன், தனது தாயாரையும் தன்னோடு அவன் இறக்கும்வரையிலும் சந்தோஷமாக வைத்திருந்தான்.

நன்றி : டெய்லிமிரர்



# துருவன்



## அழகான ஆட்டுக்குட்டி

எங்கள் வீட்டு ஆடு
இரண்டு குட்டி போட்டது
வெள்ளையொன்று
கறுப்பு ஒன்று
வேறு வேறு ஆனது.

துள்ளித் துள்ளி
ஓடிவந்து
தாயின் மீது தாவுது
ஏறி அதன் உடலின் மீது
துள்ளி விளையாடுது.

பால் நிறைந்த
தாயின் முலை
தேடிப் பார்த்து ஓடுது
பாய்ந்து பாய்ந்து
நுரை ததும்பப்
பால் குடித்து
மயங்குது.

படுத்திருக்கும் அன்னையோடு
அணைந்து கொண்டு
உறங்குது.
பாசமென்றால் என்னவென்று
எங்களுக்குக் காட்டுது.

- கிருபா.

# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?
அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந்தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.
இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.
நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.
கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந்தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

# இளந்தேனீக்கள் கழகம்

## விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................
பிறந்த திகதி :..............................
ஆர்வமுள்ள துறைகள் :..............................

.............................. ..............................
திகதி ஒப்பம்

.............................. ..............................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

# நாம் காணும் பிரபஞ்சம் கடந்துபோன காலத்தவையே!

இரவில் வானத்தை உற்றுநோக்கும் நாம் நட்சத்திரங்களைக் காண்கிறோம். ஆனால் வானத்தில் இரவில் தோற்றமளிப்பவை எல்லாம் தற்காலத்தவை அல்ல.



கடந்துபோன காலத்தவை. பூமியிலிருந்து 10 ஒளி வருடங்களுக்கப்பால் இருப்பவைதான் நாம் காணும் நட்சத்திரங்கள். 10 வருடங்களுக்கு முன்பு இருந்தது போன்றே இந்த நட்சத்திரங்களுள்ளன. ஏனென்றால், தற்போது எங்கள் கண்களை அடையும் ஒளியானது தனது பயணத்தை ஆரம்பித்தது 10 வருடங்களுக்கு முன்பேயாகும். இப்போதெல்லாம் ஒரு நட்சத்திரத்தை நோக்கும் போது அது பூமியிலிருந்து 30,000 வருடம் பழமை வாய்ந்தது. இப்போது எமக்குப் புதியதாகத் தோற்றமளிக்கிறது.

முழுமையான இரவு வானமும் கடந்துபோன காலத்தவையே. 30,000 ஒளி வருடங்களுக்கப்பாலிருக்கும் நட்சத்திரம் சொற்ப நேரத்துக்குள்ளாக பூமிக்கு ஒளியைக் கொடுப்பது பற்றி எமக்குத் தெரியாது. இந்த நேரத்திலிருந்து 30,000 ஒளி வருடங்கள் வரை இருப்பதென்பதும் தெரியாது. ஆனால் உண்மையான அந்த ஒளி எமது கண்களை அடைவதற்காக வினாடிக்கு 30,000 கி.மீ. வேகத்தில், 30,000 வருடகாலம் பயணித்தே தகவலைக் கொண்டுவருகிறது என்பதாகும்.

நாம் காணும் சூரியன் 8 ஒளி வருடங்கள் முற்பட்டதாக இருக்கிறது. ஏனென்றால், ஒளியானது சூரியனிலிருந்து பூமிக்கு பயணிக்க 8 நிமிடங்களே எடுக்கிறது. நட்சத்திரத்துடன் தொடர்புடைய (**Proxima Centuri**) மையத்திலிருந்து ஒளி பூமியை வந்தடைய 4 வருடங்கள் எடுக்கிறது. காரணம் 4 ஒளி வருடங்களுக்கப்பால்தான் அந்த மையம் இருக்கிறது. அவ்வாறே பூமிக் கிரகத்துக்கு எமது நட்சத்திர மண்டலம் இருக்கும் பால்வீதி மையத்திலிருந்து ஒளி பயணிப்பதற்கு 30,000 வருடங்கள் எடுக்கின்றன. பிரபஞ்சத்தின் தொலைவிலிருந்து ஒளி பயணிக்க பில்லியன்கள் வருடங்களை எடுக்கின்றன. எனவே நாம் காணும் பிரபஞ்சத்தைத் தூரவாகச் சென்றடைதல் என்பது பில்லியன் வருடங்கள் முற்பட்டதாகிறது. சூரியக் குடும்ப முறையானது வெகு காலத்துக்கு முன் உருவாக்கப்பட்டிருப்பதால் இப்போது நாம் காணும் பிரபஞ்சம் முழுவதும் கடந்த காலத்தவையாகவே இருக்கின்றன. தற்போதையவை அல்ல! இதன் காரணமாக, நாம் காணும் பிரபஞ்சத்திலுள்ள அனைத்துத் தோற்றங்களும் கடந்த காலத்தவையே. காலத்தைக் காண்பிக்கும் இயந்திரமாக பிரபஞ்சம் இருப்பதால் கடந்த காலத்தை நோக்கியதாக அங்கு நாம் பயணிக்கலாம்.





# மூதாட்டியும் பன்றிக்குட்டியும்

வீட்டு முற்றத்தைக் கூட்டித் துப்புரவு செய்துகொண்டிருந்த மூதாட்டிக்கு வளைந்த பென்ஸ் நாணயம் ஒன்று அகப்பட்டது. அதை வைத்து என்ன செய்யலாம் என்று சிந்தித்த அவளுக்கு, பன்றிக்குட்டியை வாங்கும் ஆவல் எழவே, சந்தைக்குச் சென்றாள்.

பன்றிக்குட்டியுடன் வீடு வந்து சேர்ந்தாள். வீட்டுப்படிகளில் தடதடவென்று ஏறிய மூதாட்டிபோல பன்றிக்குட்டியால் படிகளைத் தாண்டமுடியாமல் நின்றுவிட்டது.

சிறிது தூரம் சென்று, நாய் ஒன்றைச் சந்தித்தாள். நாயே! நாயே! பன்றிக்குக் கடித்துவிடு, அது படிகளுக்குமேல் ஏற முடியாமல் இருக்கிறது. இன்றிரவு வீட்டுக்குள் என்னால் போக முடியாது உள்ளது என்றதற்கு நாய் எதையும் செய்யவில்லை.

இன்னும் சற்றுத் தூரம் சென்றதும், ஒரு தடியைச் சந்தித்து, தடியே! தடியே! நாய்க்கு அடிபோடுவாயா என்றாள். பன்றி படிகளுக்குமேல் ஏறமுடியாது இருக்கிறது. நானும் இன்றிரவு வீட்டை அடையமுடியாது உள்ளது என்றபோது தடியும் அசையாது இருந்துவிட்டது.

மேலும் சிறிது சென்று நெருப்பைச் சந்தித்தாள். நெருப்பே! நெருப்பே! நீ தடியை எரித்துவிடு. தடி நாயை அடிக்கவில்லை. நாய் பன்றியைக் கடிக்கவில்லை. பன்றி படிகளுக்குமேல் வர முடியாது இருக்கிறது. இன்றிரவு வீட்டை அடையமுடியாது இருக்குதே. நெருப்பு மௌனமாக இருந்துகொண்டது.

இன்னும் சிறிதுதூரம் சென்று தண்ணீரைச் சந்தித்தாள். தண்ணீரே! தண்ணீரே! நெருப்பைத் தணித்துவிடு. நெருப்பு தடியைச் சுடவில்லை. தடி நாயை அடிக்கவில்லை. நாய் பன்றியைக் கடிக்கவில்லை. பன்றி படிகளுக்குமேல் ஏற முடியாது இருக்கிறது. இன்றிரவு வீட்டுக்குள் போக இயலாது இருக்கிறது என்றாள். தண்ணீரும் பேசாமல் இருந்துவிட்டது.

மேலும் சென்ற மூதாட்டி, எருதைச் சந்தித்து, எருதே! எருதே! தண்ணீரைக் குடித்துவிடு. தண்ணீர் நெருப்பைத் தணிக்கவில்லை. நெருப்பு தடியை எரிக்கவில்லை. தடி நாயை அடிக்கவில்லை. நாய் பன்றியைக் கடிக்கவில்லை. பன்றி படிகளின் மேல் வரமுடியாது இருக்கிறது. இன்றிரவு என்னால் வீட்டை அடையமுடியாது இருக்கிறது என்றாள். எருதும் அமைதியாக இருந்தது. இன்னும் சிறிது தூரம் சென்று இறைச்சிக் கடைக்காரனைச் சந்தித்தாள். எருதைக் கொல்லவனே! எருதைக் கொல்பவனே! எருதைக் கொன்றுவிடு. எருது தண்ணீரைக் குடிக்கவில்லை. தண்ணீர் நெருப்பைத் தணிக்கவில்லை. நெருப்பு தடியை எரிக்கவில்லை. தடி நாயை அடிக்கவில்லை. நாய் பன்றியைக் கடிக்கவில்லை. பன்றியால் படிகளில் ஏறமுடியவில்லை. என்னாலும் இன்றிரவு வீடு செல்லமுடியாது இருக்கிறது. இறைச்சிக்கடைக்காரனும் அதை அலட்சியப்படுத்தினான்.


நன்றி : டெய்லிமிரர்

இன்னும் சிறிதுபோனதும் அவள் ஒரு கயிற்றைக் கண்டாள். கயிறே! கயிறே! இறைச்சிக் கடைக்காரனைக் கட்டித்தொங்கவிடு. இறைச்சிக்கடைக்காரன் எருதைக் கொல்லவில்லை. எருது தண்ணீரைக் குடிக்கவில்லை. தண்ணீர் நெருப்பைத் தணிக்கவில்லை. நெருப்பு தடியை எரிக்கவில்லை. தடி நாயை அடிக்கவில்லை. நாய் பன்றியைக் கடிக்கவில்லை. பன்றி படிகளுக்கு மேலால் வரமுடியாது இருக்கிறது. இன்றிரவு என்னாலும் வீடு செல்லமுடியாது இருக்கிறது. ஆனால் கயிறும் எதையும் செய்யவில்லை.

மேலும் சென்ற அவள் ஒரு எலியைச் சந்தித்தாள், எலியே! எலியே! கயிற்றைக் கடித்துச் சிதைத்துவிடு. கயிறு இறைச்சிக் கடைக்காரனைத் தொங்கவிடவில்லை. இறைச்சிக் கடைக்காரன் எருதைக் கொல்லவில்லை. எருது தண்ணீரைக் குடிக்கவில்லை. தண்ணீர் நெருப்பைத் தணிக்கவில்லை. நெருப்பு தடியை எரிக்கவில்லை. தடி நாயை அடிக்கவில்லை. நாய் பன்றியைக் கடிக்கவில்லை. பன்றி படிகளுக்கு மேலாக வரமுடியாது இருப்பதால், இன்றிரவு வீடு செல்ல என்னால் முடியாது இருக்கிறது. எலியும் பேசாது இருந்தது.

அவள் மேலும் சென்றபோது, ஒரு பூனையைக் கண்டாள். பூனையே! பூனையே! எலியைக் கொன்றுவிடு. எலி கயிற்றைக் கடிக்கவில்லை. கயிறு இறைச்சிக் கடைக்காரனைத் தொங்கவிடவில்லை. இறைச்சிக்கடைக்காரன் எருதைக் கொல்லவில்லை. எருது தண்ணீரைக் குடிக்கவில்லை. தண்ணீர் நெருப்பை அணைக்கவில்லை. நெருப்பு தடியை எரிக்கவில்லை. தடி நாயை அடிக்கவில்லை. நாய் பன்றியைக் கடிக்கவில்லை. பன்றி படிகளுக்கு மேலாக வரமுடியாதிருக்கிறது. இன்றிரவு வீடுபோக என்னால் முடியவில்லை என்று கூறிய அவளுக்கு பூனை இவ்வாறு கூறியது. நீங்கள் ஒரு பசுவிடம் போய், எனக்கு ஒரு கோப்பை பால் கொண்டு வந்தால் நான் எலியைக் கொன்றுவிடுகிறேன் என்றது. ஆகவே அந்த மூதாட்டி பசுவிடம் சென்றாள். ஆனால் அந்தப் பசுவோ, எங்காவது வைக்கோற் போர் இருக்குமிடம் சென்று, கை நிறைய வைக்கோலைக் கொண்டுவந்தால் நான் உங்களுக்குப் பால் தருகிறேன். எனவே வைக்கோற் போரண்டை சென்ற மூதாட்டி, பசுவுக்கு வைக்கோலைக் கொண்டுவந்தாள். வைக்கோலைத் தின்றுமுடித்தவுடன் அவளுக்குப் பசு பாலைக் கொடுத்தது. பூனைக்காக அந்தப் பாலை ஒரு கோப்பையில் எடுத்துச் சென்றாள்.

பூனை ஆவலுடன் பாலை நக்கிக் குடித்தவுடன், எலியைக் கொல்ல ஆரம்பிக்க, உடனே எலி கயிற்றைக் கடிக்க ஆரம்பித்தது. கயிறு இறைச்சிக்கடைக்காரனைத் தொங்கவிட ஆயத்தமானது. இறைச்சிக்கடைக்காரன் எருதைக் கொல்ல ஆரம்பித்தான். எருது தண்ணீரைக் குடிக்க ஆயத்தமானது. தண்ணீர் நெருப்பைத் தணிக்க முயன்றது. நெருப்பு தடியை எரிக்க ஆரம்பித்தது. தடி நாயை அடிக்க ஆரம்பித்தது. நாய் பன்றியைக் கடிக்க வந்தது. பயத்தால் திடீரென பன்றி படிகளுக்குமேலால் ஏறி ஓடியது. ஆகவே அன்றிரவு மூதாட்டி தன் வீட்டை அடைந்தாள்.

# அறிந்துகொள்ளுங்கள்

◊ எமது உடலிலுள்ள குருதி நாளங்கள் எல்லாவற்றையும் அதன் ஆரம்பம் முதல் முடிவுவரை நீளத்துக்கு நீட்டும் போது 10,000 மைல்கள் தூரத்துக்குச் செல்கின்றன. பூமியின் நிலநடுக் கோட்டை நான்கு தடவைகள் சுற்றிவரப் போதுமானதாகும்.

◊ சூரியனின் ஒளிக்கதிர்கள் கடலுக்குள் 400 மீற்றர்களைத் தாண்டி ஊடுருவல் செய்ய இயலாது.

◊ மனித சக்தியால் நிர்மாணிக்கப்பட்டதுதான் சீனப் பெருமதில். அதைச் சந்திரனிலிருந்தும் பார்க்கக்கூடியதாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

◊ கண்டங்களைக் கண்டறியப் புறப்பட்டவரான அமெரிகோ வெஸ்புகி என்ற இத்தாலியர் அமெரிக்காவின் பிரதான பிரதேசங்களை 1499 இல் முதலில் கண்டுபிடித்ததால் அவரது பெயரை வைத்தே அமெரிக்கா என்று பெயர் சூட்டினார்.

◊ 330,000 சதுர மைல்களைக் கொண்ட பெரிய நாடு சவூதி அரேபியா. ஆனால் ஆறுகள் இல்லாத நாடாக இருக்கிறது.

# ஆறுமுக நாவலர்

- ஆறுமுகநாவலர் 1822 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம், 18 ஆம் திகதி பிறந்தார்.
- ஆறுமுகநாவலரின் தந்தையார் பெயர் கந்தப்பிள்ளை, தாயார் பெயர் சிவகாமி அம்மையார்.
- ஆறுமுகநாவலர் யாழ்ப்பாணத்து நல்லூரில் பிறந்தார்.
- ஆறுமுகநாவலருக்கு பெற்றோர் இட்டபெயர் ஆறுமுகம்.
- ஆறுமுகநாவலர் ஐந்தாம் குரவர் எனப் அழைக்கப்பட்டார்.
- சைவசமயத்துக்கும், தமிழ் மொழிக்கும் பெரும் பணியாற்றிய சைவத் தமிழ்ப் பெருமகனார்.
- திருவாவடுதுறை ஆதீனம் இவரின் சைவத் தமிழ்ப் பணிகளைப் பாராட்டி "நாவலர்" பட்டம் வழங்கிக் கௌரவித்தது.
- ஆறுமுகநாவலர் சைவசமயப் பிள்ளைகளுக்கு கல்வி கற்கவேண்டும் என்று வண்ணார்பண்ணையிலும், சிதம்பரத்திலும் சைவப் பிரகாசவித்தியாசாலை என்ற பெயரில் பாடசாலைகளை நிறுவினார்.
- சைவப் பிள்ளைகள் கற்பதற்கு ஏற்ற சமய நூல்களையும், பாடநூல்களையும் எழுதிப் பதிப்பித்து வெளியிட்டார்.
- ஆறுமுகநாவலர் யாழ்ப்பாணத்திலும், சென்னையிலும் அச்சுக்கூடங்களை, வித்தியாபாலன அச்சு இயந்திரசாலை என்னும் பெயரில் நிறுவினார்.

கு.ஜெயதாரிணி,
தரம் – 05
யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி


விடுபட்ட ஆங்கில எழுத்துகளைப் பொறுக்கியெடுத்துப் பொருத்திப் பாருங்கள்.- குளு குளு நாடொன்று அகப்படும்.

| | | |
|---|---|---|
| B P Q J | X V K F M | Y G C U O H |

இதோ இந்துப் படத்தில் இருப்பவர் யார் தெரியுமா? குறும்புக்கார சுண்டெலியார்தான்! அவர் தன் வாலை எங்கே கொண்டுவந்திருக்கிறார் பார்த்தீர்களா? சுண்டெலியாரை வர்ணம் தீட்டி மகிழுங்களேன்!



பகீரதன் பல வடிவங்களிலான தகரத் துண்டுகளை வெட்டிக் கொண்டிருந்தான். ஒரே வடிவத்திலான இரண்டு துண்டுகள் அவனுக்குத் தேவைப்பட்டது. இந்தத் தகரத்துண்டுகளுக்குள் அவற்றைத் தேடிக் கொடுங்கள் பார்க்கலாம்





# உங்கள் கைவண்ணம்



கு.பானுராஜ், தரம் - 07,
யா/கலட்டி றோ.க.த.க.ஆ.பாடசாலை.




ஞா.ஞானறொபின்சன், தரம் - 07,
யா/கலட்டி றோ.க.த.க.ஆ.பாடசாலை.



அ.மக்லின், தரம் - 07,
யா/கலட்டி றோ.க.த.க.ஆ.பாடசாலை.

பா.பாலினி, தரம் - 07
யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி.



# My Self

My name is M.Sivagowri.
I live at Vadaliyadaippu.
I study at J/Pandateruppu Girls High School.
I have two sisters and two brothers.
My favourite subjects are Maths and Tamil.
My hobby is stamp collecting and gardening.
My pet is a Cat. Its name is Gimmi.
My friends are Balini and Galagini.
I want to be a Teacher.

Miss M.Sivagowri,
Grade - 07,
J/Pandateruppu Girls High School.


# அன்னையே




பத்துமாதம் என்னை உன் கருவறையிலே சுமந்து, உன் உதிரத்தைப் பாலாக ஊட்டி வளர்த்ததோடு மட்டுமன்றி அதனோடு சேர்த்து அறிவையும் ஊட்டி வளர்த்த என் தெய்வ வடிவ அன்னையே! நீ எனக்காகப்பட்ட துன்பங்கள் கொஞ்சமல்ல. அதை நான் எப்போதும் நினைப்பேன். அன்னையே எனக்கு சிறு நோய் ஏற்படும்போது நீ ஊண், உறக்கமின்றி நோய்தீரும்வரை புழுவாய்த்துடித்து, கண்ணை இமை காப்பதுபோல் பாதுகாத்திடுவாய். ஏழேழு ஜென்மம் எடுத்தாலும் உன்னை ஒரு போதும் மறக்கமாட்டேன் என் அன்னையே.

சி.அசோக்கமாலா
தரம் - 11
யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.


# விகடகவியின் விகடத்தனம்



கிருஷ்ண தேவராயர் அரசசபையில் தெனாலிராமன் மிகுந்த வரவேற்பைப் பெற்ற விகடகவியாக விளங்கிவந்தான். இது அங்கிருந்த அரச குருவான தத்தாசாரியாருக்கு எரிச்சலை உண்டாக்கியது. அவர் தினமும் தெனாலி ராமனை அவமதிக்கும் வகையிலான வழிகளைக் கடைப்பிடித்து வந்ததால் இத்தகைய அவமதிப்புகளை ராமன் பொறுமையுடன் சகித்து வந்ததோடு, அவரை மடக்கும் வாய்ப்புக்காகக் காத்திருந்தான்.



ஒரு நாள் குருவானவர் ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த போது, தெனாலி ராமனும் அவ்வழியால் செல்லவேண்டியிருந்தது. அப்போது அவனுக்கான தருணம் வந்தது! ஆற்றங்கரையிலிருந்த அவரது ஆடைகளை இரகசிய மாக எடுத்து மறைத்துக் கொண்டான்.




ஆத்திரமடைந்த குரு தனது ஆடைகளைத் திருப்பித்தருமாறு ராமனிடம் கேட்டார். ஆனால் அதற்கு ஒரு நிபந்தனை விதித்தான் தெனாலிராமன். குருவானவர் தன் தோள் மீதாகத் தன்னைத் தூக்கி வைத்துக் கொண்டு நகர்வலம் வரவேண்டுமென்பதே அந்த நிபந்தனை. எதுவும் செய்யமுடியா மல் அந்த நிபந்தனைக்கு குரு உடன்பட்டார்.



குருவின் தோள்களுக்கு மேலாக உட்கார்ந்த ராமன் நகர்வலம் வரும் போது மக்கள் கைகொட்டி ஆரவாரம் செய்தனர். மேல்தளத்தில் நின்ற கிருஷ்ணதேவராய மன்னனும் இந்தக் காட்சியைக் கண்டு திகைத்தான். அவன் உடனடியாகத் தன் காவலர்களை அழைத்தான்.




தானடைந்த அவமானத்தை தெனாலிராமன் மேல் சுமத்தி, அவனையும் அவமானமடையச் செய்ய போவதாக எண்ணிய குருவானவரும் அதை ஏற்று உடனடியாக அவன் தோளில் ஏறிச்சென்றார்.




சொற்பதூரம் சென்றதுதான் தாமதம், குருவானவர் முதுகில் பலமான அடிகள் விழுந்தன. அந்த அடியால் கீழே விழுந்த குருவானவரைக் காவலர்கள் மேலும் மேலும் தாக்கினார்கள். அவர் வேதனை தாளாமல் அலறினார்.





குளித்துவிட்டு வந்து பார்த்த அவருக்கு, தனது ஆடைகள் காணாமற்போய் விட்டது தெரிந்தது. அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடைந்த குருவானவருக்கு பின்புறப் புதரிலிருந்து யாரோ கெக்கலித்துச் சிரிப்பது கேட்டது. அங்கே தெனாலி ராமன் நின்றதைக்கண்டார்.



அரசன் தன் காவலர்களை உரத்துச் சத்தமிட்டு அழைப்பதைக் கண்ட உட னேயே, குருவின் தோளிலிருந்து கீழே குதித்து, தன்னை மன்னிக்குமாறு அவரிடம் கோரிய ராமன், மீதமுள்ள பாதையூடாக தானே அவரைத் தோளில் காவிச் செல்வதாக உறுதியளித்தான்.



அப்பாவியான குருவானவர் அதை நல்லதொரு படிப்பினையாக உணர்ந்தார். அன்றிலிருந்து அந்தக் குருவானவர் தெனாலிராமனைக் கேலி செய்து அவமானப்படுத்தும் வகையில் நடந்து கொள்ளவில்லை.

## வல்லவனுக்கு வல்லவன்

நரியொன்று காட்டினூடாக இரைதேடி அலைந்தது. எதுவும் கிடைக்காததால் களைத்துப்போய் ஒரு பற்றை மறைவில் பதுங்கி இருந்தது.

அப்போது அருகிலிருந்த பற்றைக்குள் இருந்த முயலொன்று சரேலெனப் பாய்ந்து ஓடியது. அதைக் கண்ட நரி முயலைத் துரத்தத் தொடங்கியது. முயலோ வேகமாக நரியைச் சுற்றிச்சுற்றி ஓடியது. நரிக்குத் தலை சுற்றிக்கொண்டு வந்தது. உடலெங்கும் வியர்த்துக் களைத்துப்போய்விட்டது.



நரிக்கு நல்ல பாடம் புகட்டவேண்டுமென்று முயல் விரும்பியது. வழியில் முட்புதர் ஒன்றைக் கண்டதும், அதன் கீழ் ஓடிச்சென்று நிலத்தில் குழி செய்து கொண்டு நரிக்குத் தெரியக்கூடியதாகப் படுத்துக் கொண்டது.

இதைப் பார்த்த நரி பசிக்களையினால் பாய்ந்து சென்று முயலைப் பிடிக்க முனைந்தது. பாவம் நரி. புதரின் மேல் இருந்த கூரிய முட்களின் மீது விலக முடியாதவாறு மாட்டிக்கொண்டு தொங்கியது.

எது நடக்கும் என்று நினைத்ததோ அது நடந்து விட்ட சந்தோஷத்தில் முயல் பாய்ந்து ஓடியது.

## திகிலூட்டிய சினிமாப்படம்

அஜந்தாவுக்கு அன்று பிறந்த நாள் கொண்டாட்டம். ஆண்டு 5இல் கல்வி கற்கும் அவளுக்கு நண்பர், நண்பிகள் ஏராளம். பிறந்த நாள் கொண்டாட்டத்துக்கும் எல்லோரும் வந்திருந்து வாழ்த்தி விருந்துண்டனர். அன்று மாலை நண்பர், நண்பிகள் குழாமுடன் சினிமாப் படமொன்றைப் பார்ப்பதற்காக திரையரங்குக்குக் கிளம்பியபோது அவளின் பாட்டன், பாட்டியும் துணைக்குச் சென்றனர். திரையில் படம் ஓடிக் கொண்டிருந்தது. அது ஒரு திகிலூட்டும் பேய்ப்படம். அவள் அடிக்கடி பயந்து நடுங்கிக்கொண்டே படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். ஏன்தான் இதற்கு வந்தோம். வெளியே போய் விடலாமா என்று கூட நினைத்தாலும் மற்றையோரை மனதில்வைத்து அமைதியானாள். அப்போது பின்புறமிருந்து ஒரு கை அவள் தோள் மீது பதிந்தது. திடீர்க்கூச்சல் போட்ட அவள், மயக்கமடைந்தாள். உடனே படம் நிறுத்தப்பட்டு வெளிச்சம் பாய்ச்சப்பட்டது. அவளை நோக்கி எல்லோரும் ஓடிவந்தனர். ஒரு வயோதிபர் எழுந்து நின்று பின்னாலிருந்த தனக்கு படத்தை ஒழுங்காகப் பார்க்க முடியாதவாறு அவள் மறைத்துக் கொண்டிருந்ததால் சற்றுச் சாய்ந்திருக்குமாறு கூறுவதற்குத் தோளைத் தட்டியதாகத் தெரிவித்து மன்னிப்புக் கேட்டார். இதைக் கேட்ட நண்பர்கள் சிரித்துக் கேலி செய்தார்கள். அன்றிலிருந்து அஜந்தா பேய்ப்படம் பார்ப்பதை நிறுத்திக் கொண்டாள்.

நமது ஈழநாடு

**வைர வரிகள்**

கலங்காது கண்ட வினைக்கண் துலங்காது
தூக்கம் கடிந்து செயல்.

- திருக்குறள் -

## நமது நோக்கு

# இணைத் தலைமை நாடுகளின் ஒரு பக்கச் சாய்பு நிலைப்பாடு!

யாழ்.குடாநாட்டில் கடந்த சில நாட்களாக படையினர்மீது இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல் நடவடிக்கைகளுக்குப் பழிவாங்கும் வகையில அப்பாவிப் பொதுமக்கள்மீது அரச படையினா மேற கொண்டுவரும் மிலேச்சத்தனமான, கண்மூடித்தனமான- தாக்குதல்கள் நாளுக்கு நாள் அதிகரித்தவண்ணம் உள்ளது.

வீதியெங்கும் பரவலாக - துப்பாக்கி விசையில் விரல் பதித்த நிலையில், சினம்கொண்ட பார்வையினராக நிற்கும் படைத்தரப்பினர் - தமது அன்றாட அலுவல்களுக்காகவும், அத்தியாவசிய தேவைகளுக்காகவும் போக்குவரத்தை மேற்கொள்ளும் அப்பாவிப் பொதுமக்கள், மாணவர்கள் போனறோரை சந்தேக நோக்குடன் பார்ப்பதானது, சோதனையிடுவதானது, சிலவேளைகளில் பதற்றம் நிறைந்த சூழலில் கொட்டன் தடிகளைப் பாவித்தும், சைக்கிள் செயின்கள் போன்றவற்றை உபயோகப்படுத்தியும் தாக்குவதானது அரச அராஜகமாகவே உள்ளது.

இத்தகைய மக்கள் மீதான தாக்குதல்கள் எந்தவிதமான நியாயபூர்வ காரணமும் அற்றது என்பதுடன், மக்களை உயிரியல் மற்றும் உளவியல் ரீதியாகப் பாதிப்புறச் செய்யும் உள்நோக்கத்தைக் கொண்டதாகவும் உள்ளது.

இத்தகைய காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்கள மற்றும் துப்பாக்கிச் சூடுகளுக்கு இலக்கான பலர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்றுவருவது தெரிந்த விடயமேயாகும்.

இவர்களில் மாணவர்கள், கல்வித்துறைசார் பேராசிரியர்கள், கலவியாளர்கள், பொதுமக்கள், ஊடகவியலாளா கள் எனப் பல தரப்பினரும் அடங்குவர்.

இதில் முக்கிய விடயம் இவர்களில் பலருக்கு என்ன நடந்தது, என்ன நடக்கியது என்று தெரியாமல் படையினரிடம் மாட்டிக்கொண்டவர்களேயாகும்.

நேறறுமுன்தினம் யாழ்.தினக்குரல் அலுவலக வாசலில வைத்து, யாழ்.பூபாலசிங்கம் புத்தகக் கடை ஊழியர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

அதனையடுத்து அன்று மாலைவரை நடைபெற்ற சம்பவங்களின் எதிரொலிகள் மக்களின் இயல்பு வாழ்வை முற்றாக நாசம் செய்துள்ளதுடன், குடாநாட்டை அச்சமும, பீதியும் ஆக்கிரமிக்கும் நிலையையும் உருவாக்கியுள்ளது.

கடநத நான்கு தசாப்தகாலமாக தொடரும் வடக்கு-கிழக்கு வாழ் தமிழ்பேசும் மக்களுக்கு எதிரான இத்தகைய அரசியல் மற்றும் ஆயுதரீதியிலான அடக்குமுறை, வன்முறைச் செயல்களுக்கு ஒரு முடிவின்றி இருப்பதானது - இப்பகுதிகளில் நிரந்தர அமைதியின்மைக்கே வழிவகுத்துள்ள நிலையில் - இங்கு சமாதானச் சூழல் நிலவுவதாகவும், அதற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுவிடக்கூடாதெனவும், அமைதிப் பேச்சுக்களை உடன் தொடங்க வேண்டுமெனவும், அனுசரணைப் பணியாளர்களும் -சர்வதேச சமூகமும் கூறிவருவதுதான் விந்தையான விடயமாகும்.

புயலுக்கு முந்திய மந்த சூழலை, அமைதி நிலை என வர்ணிப்பதில் எந்த அர்த்தமும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஜனநாயகம், சமாதானம், மனித உரிமை ஆகியவற்றை வலியுறுத்தி, அதனைப் பாதுகாக்க உழைப்பதாகக் கூறுவோர், இந்த உரிமைகள் அனைத்தும் மறுக்கபட்டு ஒடுக்கப்பட்ட நிலையில் அரச பயங்கரவாதத்தின் பிடியில் - மரண நிலையில் இருந்து மீளப்போராடும் மக்களைப் பயங்கரவாதிகள் எனவும், அவர்களின் நியாயபூர்வமான போராட்டத்தை பயங்கரவாதம் எனவும் பிரசாரம் செய்ய முனைவதுதான் துயரம்தரும் மனிதகுல அவமானமாகும்.

ஆதிக்க - மேலாதிக்க - வல்லாதிக்க சக்திகள் ஓரணயில் நின்று தமது அபிலாஷைகளுக்கேற்ப ஜனநாயகத்தையும், மனித உரிமைகளையும் வரையறை செய்ய முயல்வதுதான் இன்றைய உலகளாவிய ரீதியில் சிறுபான்மையின மக்கள்படும் அவலங்களுக்கெல்லாம் மூல காரணமாகும்.

இலங்கை அரசின் போர்நிறுத்த மீறல்களையோ, அரச இராணுவ பயங்கரவாதத்தையோ அல்லது புரிந்துணர்வு உடன்பாட்டின் அம்சங்களை ஒப்புக்கொண்ட பிரகாரம் அமுல்செய்யாத தன்மையையோ கண்டுகொள்ளாது அல்லது கண்டுகொண்டும் மௌனம் காக்கும் இணைத்தலைமை நாடுகளோ - ஐரோப்பிய ஒன்றியமோ அல்லது ஏனைய சர்வதேச சமூகமோ, விடுதலைப் புலிகளை மட்டும் கண்டிக்க முனைவது தமிழர் தரப்பு நியாயத்தைப் புறந்தள்ளிவிட்டு, பேரினவாத அநியாயத்துக்கு ஆசீர்வாதம் வழங்கும் செயலாகவே உள்ளது.

இந்த ஒருபக்கச்சார்பு நிலை உண்மையான சமாதானத்தை ஏற்படுத்த ஒருபோதும் உதவப்போவது கிடையாது.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




## நாளை கிறிஸ்மஸ்...

# எமக்குள் கிறீஸ்து பிறந்து விட்டாரா...?



சமாதானத்தின் வேந்தர் யேசுக்கிறீஸ்துவின் பிறப்பினை சமகாலத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது அங்கேயும் இடப்பெயர்வு, அகதி வாழ்வு, கொடுங்கோல் ஆட்சி போன்றவை காணப்படுகின்றது. ஏரோது மன்னனுக்குப் பயந்து யோசேப்பு மரியாளுடன் இரவோடு இரவாக எகிப்துக்கு இடம்பெயர்ந்தமை எங்கள் கடந்தகால அமைதியைத் தேடிய இடப்பெயர்வை நினைவுபடுத்துகிறது!

பெத்லேகேமிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளை வெட்டிச் கொல்ல அனுமதி அளித்த ஏரோதுவின் செயல்களோடு கடந்த வருடம் இடம் பெற்ற சுனாமியும் அதில் காவு கொள்ளப்பட்ட மனித உயிர்களும் குறிப்பாக குழந்தைகளை, பேரலைகள் கொன்று குவித்ததும் இன்றுவரை தீராத சோகங்களாகவே காணப்படுகிறது!

யுத்தங்கள் இயற்கை அனர்த்தங்கள் யாவும் ஏன் மனித வர்க்கத்தைக் காவு கொள்ள வேண்டும், கொலை, சொ…ளை, பில்லிசூனியம் இவை எல்லாம் தேவைதானா?

மனித உயிர்களுக்கு மதிப்பில்லாத காலமிது! இன்றைய செய்தி இதழ்களைப்புரட்டினால் மரணங்கள் மலிந்த தேசமாக, மனிதமில்லாமல் எமது வாழ்வு எங்கே போகின்றது எனப் பல கேள்விக் கணைகள் தொடர்கிறது.

கிறிஸ்து யேசுவின் பிறப்பை சமாதானப் பிறப்பாகக் கருதினால்.. இயேசுவை சிலுவையில் அறைந்தது போல வருடாவருடம் உள்நாட்டுப் போர் விஸ்வரூபமெடுத்து அமைதி முயற்சியை அடித்துத் துரத்துகின்றது. உலகத்துக்கு அமைதி கிடைக்குமோ, சமாதானம் மலருமோ என்று ஏங்குகின்ற விழிகள் ஆயிரம் ஆயிரம். ஆனால் சமாதானம் அமைதி நிலைபெற்று இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்தும் போர்கள் எதற்கு, இயற்கை அனர்த்தங்கள் ஏன்? என்று நாம்சிந்திக்கிறோம். எந்த மனிதருக்கும் தன்போல அவலச்சாவு வரக்கூடாது என்பதற்காகவே தன் உயிரை தந்த இறைமகனின் அன்பை புறக்கணித்த மனிதா? இன்று உனக்கு அவலச் சாவுகளும், அழிவுகளும் சர்வ சாதாரணமாகிப் பெருகிவருகின்றது. கடவுளை மறந்தாய், மனிதம் என்ற காவியத்தை மறுதலித்தாய், சுயநலம், போட்டி, பொறாமை, விட்டுக் கொடுக்காமை போன்றவைகளால் எம் நாட்டில் மட்டுமல்ல அன்பற்ற குடும்பங்களிலும், அயல் நாடுகளிலும், ஏன் கிராமங்களிலும் எத்தனை உள்ளங்களை வேதனைப்படுத்துகிறோம். மானுடங்களை வேகவைக்கும் மனிதமற்ற செயல்கள் மடியும் காலமாக இந்த வருடப்பிறப்பும் இயேசுவின் பிறப்பும் இதயங்களில் அமைதியுடன் பிறந்துவிட்டதா? பிறக்குமா? என்பதே கிறிஸ்மஸ் செய்தியாகவுள்ளது. "அஞ்சாதீர்கள் இதோ எல்லா மக்களுக்கும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று ஆண்டவராகிய மெசியா எனும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கின்றார்" (லூக்காஸ் 2-11)


அன்று தாவீதின் ஊரிலே பிறந்தவர், இன்றாவது எம்முள்ளத்தில் பிறந்துவிட்டாரா? அப்படியானால் மகிழ்ச்சியாயிருங்கள். நடத்தையைச் சீர்ப்படுத்துங்கள். மன ஒற்றுமை கொண்டு அமைதியுடன் வாழுங்கள் அப்போததான் அன்பும், அமைதியும் வழங்கும் கடவுள் உங்களோடு தங்குவார் என்னும் இறை செய்தியைப் பின்பற்றுவோமாக!

யுத்தத்தின் வடுக்களால் அல்லறுவோர், கொலைகள், விபத்துக்கள் பாதிக்கப்பட்ட உறவுகள், இயற்கை அனர்த்தங்கள் சூறையாடிய மனித மனங்கள் மத்தியில் கிறிஸ்து பிறந்திருக்கின்றார். எனவே ஏழை, எளியவர், ஆதரவில்லாதவர்களோடு கைகுலுக்குவோம் மனம் விட்டுப்பேசுவோம். ஆறுதல் கூறி சிரித்து மகிழுவோமாக. இதை விடுத்து வசதி வாய்ப்புக்களுக்காக ஏன் அலையவேண்டும். ஏழ்மை நிலையுள்ள மனமிருந்தால், ஏழைகளைப் பார்க்கும் விழிகளிருந்தால் ஏழைகளுடன் பேச உதடுகளிலிருந்தால் போதும் செல்வந்தர்களாக வாழலாம்! மற்றவர்களுக்கு உதவுவதை விட உயர்ந்த செல்வம் வேறில்லை. இரண்டு அங்கி வைத்திருப்போர் ஒரு அங்கியைக் கொடுக்காது விடினும் ஒரு அங்கியை பறிக்காமலிருக்கின்றவர்களாக இருப்போம். இறை மகனைப் போல உயிரைத் தியாகம் செய்யும் மனமில்லாது போகினும், சின்னச்சின்ன உதவிகளைச் செய்து மகிழும் மனிதர்களாக முயல்வோம்!

அர்த்தமுள்ள வகையில் கிறிஸ்து பிறப்பைக் கொண்டாட விரும்பின் மாளிகைகளை விட்டு குடிசைகளைத் தேடிப் போவோம். சோக்கேசுக்குள் பூட்டிவைத்து "பாலகனை" சோடித்துப் பார்க்கும் கொண்டாட்டங்களைத் தவிர்த்து அயல் வீட்டில் அடுப்பெரிய வைப்போம்! இன்றைய உலகில் ஆடம்பரம் தேவைதான். விளம்பரம் தேவைதான். இவையாவும் நம்மை மற்றவர்கள் பார்க்க வேண்டும் என்பதற்காக நாம் மாட்டியிருக்கும் ஆடைகளாகும்! ஆனால் எம்மை நாம் பார்க்கவோ, எமது ஆத்மாவை மகிழ்விக்கவோமுடியாது. எனவே சோகங்களோடு வாழும் சோதரரைத் தேடிப் போவோம். எமக்குள் யேசு பாலகனை பிறக்க வழி செய்வோம்.

**ஜோக்கியன் கொழும்புத்துறை**

**◆தமிழ் மக்களின் ஒற்றுமைக்கான முயற்சியில் தான் முன்வைத்த காலைத் தொடர்ந்து எடுத்து வைப்பார் தொண்டமான் என்பதே அனைவரதும் நம்பிக்கை. மலையகத் தமிழ் மக்களின் எதிர்காலம் கிளிநொச்சிப் பயணத்தின் மூலமே விடிவடையும் என்பதைத் தொண்டமான் உணர்ந்தால் பலன் நிச்சயம் உண்டாகும். தவறினால் மலையக மக்களைச் சிங்களப் பேரினவாதம் விழுங்கிவிடும் என்பது தவிர்க்க முடியாததாகும்.◆**



# ஆறுமுகன் தொண்டமானின் வன்னிப் பயணமும் அதன் முன்னணிகளும், பின்னணிகளும்....!

தமிழ் பேசும் மக்களைப் பிரித்து அழிப்பதில் காலம் காலமாகத் தன் கைவரிசையைக் காட்டி வருகின்றது சிங்களப் பேரினவாதம். தமிழர் தாயகத்தில் வாழ்ந்து வருகின்ற இஸ்லாமிய மக்களை, யும் தமிழ் மக்களையும் மோத விடுவதில் தனது செயலைத் தொடங்கிய சிங்கள ஆட்சியாளர்கள் அதில் வெற்றி கண்டுள்ளார்கள் என்று தான் சொல்ல வேண்டும்.

இவ்வாறு இஸ்லாமிய மக்களைப் பிரித்தவர்கள், அதன் பின்னர் இஸ்லாமிய மக்களையும் பல்வேறு கூறுகளாக்கி அவர்களது பலத்தையும் சிதறடித்துள்ளனர் எனலாம். பல்வேறு அரசியல் கட்சிகள் முஸ்லிம் மக்களிடையே தோன்றக் காரணம், இவ்வாறான சிங்களப் பேரினவாதிகளின் செயல்களே யாகும்.

இதே வழியிலேயே தமிழினத்தையும் கூறுபோடலாம் என அவர்கள் நினைத்துச் செயற்பட்டனர். ஆனால், தமிழினம் ஒற்றுமையை விட்டுவிடவில்லை. தந்தை செல்வாவே இந்த ஒற்றுமையை முதலில் ஏற்படுத்தியவர். அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில புல்லுருவிகள் தோன்றினாலும் கூட, தமிழினம் அவற்றிற்கு இடம்கொடாது ஒரு தலைமையில் திரண்டு நின்றது. இந்த ஒற்றுமை இன்று தமிழீழ விடுதலைப்புலிகளால் கட்டி வளர்க்கப்பட்டு வருகின்றது. தமிழ் பேசும் மக்களின் விடுதலையை வென்றெடுக்கப் போராடிவரும் விடுதலைப் புலிகளை உடைக்கும் விதத்திலும், பலவீனப்படுத்தும் விதத்திலும் பிரதேசவாத உணர்வைத்தூண்டி, மக்களைப் பிரித்துவிடச் சிங்களப் பேரினவாதிகள் பெருமுயற்சி எடுத்தனர். அதில் தோல்விகண்ட சிங்கள அரசு, அதே நபர்களை வைத்து தமிழ், முஸ்லிம் உறவில் விரிசலை ஏற்படுத்தத் தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. தமிழ் பேசும் இனத்தின் ஒற்றுமையைப் புலிகள் தான் குழப்புகிறார்கள் என்பது, எவ்வாறு பொருத்தமற்றது என்பதைப் புரிந்து கொள்ளாதவர்களே இவ்வாறு குற்றச்சாட்டைக் கூறுகின்றனர். ஒற்றுமையே விடுதலைக்கு இலகுவான வழி என்று கூறிப் போராடும் புலிகள் ஒற்றுமையைக் குலைப்பார்களா? இவர்களது ஒற்றுமை விடுதலைக்கு வித்தாகிவிடும் அதைக் குழப்பவேண்டும் என்று நினைப்பவர்கள் ஒற்றுமையைக் குழப்புவார்களா? இந்தக் கேள்விக்கான பதிலை அறிந்தவர்கள் தற்பொழுது தென் தமிழீழத்தில் நடக்கும் தாக்குதல்களின் பின்னணியில் உள்ளவர்களை இனம் காணமுடியும். எப்பொழுதும் ஒரு விடுதலைப் போராளி தன்னைப் பலவீனப்படுத்த மாட்டான் என்பதை அனைவரும் உணர்ந்துகொள்ளவேண்டும். அதனடிப்படையில் சிந்தித்தால் எல்லா உண்மைகளும் விளங்கும்.

இவ்வாறு தமிழ் மக்களையும் - இஸ்லாமிய மக்களையும் பிரித்து விடுவதில் அக்கறை கொண்ட சிங்கள ஆட்சியாளர்கள், தமது அடுத்த நடவடிக்கையாக மலையகத் தமிழ் மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்தி வருகின்றனர். இதன் எதிரொலியாகவே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் தமிழீழ விடுதலைப் புலிகளைச் சந்திக்கச் சென்றமையாகும்.

மலையகம் வாழ் தமிழ் மக்கள் ஓரணியாக இருப்பது, தேர்தல் காலங்களில் அவர்கள் ஒரு தீர்மானிக்கும் சக்தியாக இருப்பது என்பன பேரினவாதிகளுக்கு இடைஞ்சலான விடயமாகும். எனவே, அவர்களையும் பல்வேறு பிரிவுகளாகப் பிரித்து விடுவதால் தங்களின் இருப்பை உறுதிப்படுத்திக்கொள்ளமுடியும் என்பது சிங்களத்துக்கட்சிகளின் எண்ணமாகும். தற்போது நடந்து முடிந்த சிறிலங்காவின் ஜனாதிபதித் தேர்தலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும், மலையக மக்கள் முன்னணியும் ரணிலை ஆதரித்ததால் சொற்ப வாக்கு வித்தியாசத்திலேயே மகிந்த வெற்றிபெற முடிந்தது. இந்த நிலையைக் குழப்பிவிடுவதன் மூலம் தமது நிலையை வலுப்படுத்திக் கொள்ளலாம் என்ற முயற்சிகளில் ;அவர்கள் சிலருக்கு அமைச்சுப் பொறுப்புகளைக் கொடுத்து மலையகக் கட்சிகளிடையே பிளவுகளை ஏற்படுத்தி வருகின்றனர். மிகமோசமான ஜனநாயகக் கொலையாகும் இது. மக்கள் முதலில் கட்சிக்கே வாக்களிக்கின்றனர். ஆட்களுக்கு வாக்களிக்காவிட்டாலும், அந்த வாக்குக்கட்சிக்கு மட்டும் அளித்தால் செல்லுபடியாகும். அவ்வாறு கட்சி அடைந்த வெற்றியை மாசுபடுத்திக் கட்சி மூலம் வென்றவரை ஆளும் தரப்புக்கு மாற்றுவதற்குரிய முறையில் சட்டம் திருத்தப்பட்டுள்ளது. அதுவும் தமிழ் மக்களை வடக்கு - கிழக்கு என்று பிரிப்பதற்காக மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த செ.இராசதுரை ஆளும் கட்சிக்கு மாறுவதற்கு ஏற்ற வகையில் சட்டம் திருத்தப்பட்டது. அதுவரை எவராவது தான் வென்ற கட்சியிலிருந்து வேறுகட்சிக்குத் தாவினால், அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்தவராகி விடுவார். எனவே, தமிழினத்தைக் கூறுபோடுவதற்காகக் கட்சி மாறும் சட்டத்துக்குத் திருத்தம் செய்தனர். இந்தத் திருத்தம் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவால் கொண்டுவரப்பட்டது. இதே சட்டம் தான் ஐக்கிய தேசியக் கட்சியினர் ஆளும் கட்சிக்குத் தாவவும் பயன்பட்டது, பயன்படுகிறது.

இவ்வாறு கட்சித் தாவல்களை ஊக்குவித்து மலையத்தில் மக்களைப் பிளவுபடுத்துவதில், இன்றைய ஆட்சியாளர்கள் முயன்று வரும் வேளையில் தான் -ஆறுமுகன் தொண்டமான் விடுதலைப் புலிகளைச் சந்தித்துள்ளார். இங்கே ஆறுமுகன் தொண்டமான் எதற்காக இந்த நேரத்தில் இவ்வாறு மலையக மக்களும் இதர தமிழ் மக்களும் ஒன்றுபடவேண்டும் என்று முயற்சிக்கிறார்? என்று கேள்வி எழுப்புகின்றனர். அதே போன்று வேறு ஒரு கேள்வியையும் எழுப்புகின்றனர். மலையகப் பிரச்சினை வேறு, வடக்கு - கிழக்குப் பிரச்சினை வேறு என்று கூறியிருக்கிறீர்களே தற்பொழுது ஏன் வடக்கு - கிழக்குத் தமிழ் மக்களுடன் ஒற்றுமை பற்றிப் பேசுகிறீர்கள் என்றும் கேட்கிறார்கள்.

தமிழினத்தின் வரலாற்றைச் சற்றுப் பின்நோக்கிப் பார்த்தால் இந்தக் கேள்வி எழுந்திருக்க நியாயமில்லை என்பது புரியக் கூடும். 1976 ஆம் ஆண்டு மே மாதம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது மாநாடு வட்டுக்கோட்டையில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் மே 14 ஆம் நாள் பிரசித்திபெற்ற வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழீழ மக்கள் தங்கள் சுயநிர்ணய உரிமையைப் பாவித்துச் சுதந்திர தமிழீழத்தை நிறுவுவதென்பதே அந்தத் தீர்மானத்தின் பொழிப்பாகும். இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பொழுது தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களாக அதே மாநாட்டில் தெரிவு செய்யப்பட்டவர்கள் தந்தை செல்வா, ஜீ.ஜீ. பொன்னம்பலம், தொண்டமான் ஆகிய மூவருமாவர். தமிழர் தாயகத்துக்கு விடுதலை கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது, தொண்டமான் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராகவே இருந்தார். வடக்கு - கிழக்குக்கு சுதந்திரம் கேட்டபொழுது மலையகம் வாழ் மக்களுக்கு அடிப்படை உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்ற தோரணையிலேயே தமிழ் மக்களின் ஒற்றுமை அங்கு உறுதிப்படுத்தப்பட்டது. ஜீ.ஜீயின் சாவு, தந்தை செல்வாவின் சாவு என்பனவும், அதன் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயற்பாடுகளும், தொண்டமானின் தனியான அரசியல் அணுகுமுறைகளும் இந்த ஒற்றுமையை மேற்கொண்டு செல்லத் தவறிவிட்டன. ஆனால், தொண்டமானின் ஆளுமை உள்ள தலைமை இலங்கைத் தொழிலாளர் காங்கிரசைப் பிளவுபடாமல் காத்துவந்தது. தமிழீழ விடுதலைப்புலிகளிடம் தமிழர் தாயகப் பகுதியை 10 ஆண்டுகளுக்கு இடைக்கால நிர்வாகம் நடத்தக் கையளிக்கும்படி கோரிக்கை விட்ட துணிச்சல் தொண்டமானிடமிருந்தது. ஆனால் அவரின் சாவுக்குப் பின்னர் அவர் கட்டிக்காத்த ஒற்றுமை மெதுவாகச் சிதறத்தொடங்கியது. அவர் இருக்கும் பொழுதும் சில பிளவுகள் தோன்றினாலும் அவற்றைத் தனது ஆளுமையால் சரிப்படுத்திவந்தார் அவர். ஆனால், அவரது மறைவுக்குப் பின்னர் அதுவும் தற்பொழுது பெரிய எடுப்பில் மலையகத் தமிழர்களைப் பிளவுபடுத்துவதில் பேரினவாதம் முனைந்து வருகின்றது. எனவே, 1976 ஆம் ஆண்டில் ஏற்பட்ட அந்த ஒற்றுமை உணர்வை மீண்டும் ஏற்படுத்த ஆறுமுகன் தொண்டமான் தற்பொழுது முனைந்துள்ளார் என்று கருதலாம். காலம் தாழ்த்தி எடுக்கப்பட்ட முடிவாக இருந்தாலும் அதனை உளத் தூய்மையுடன் மேற்கொண்டால் தமிழினத்துக்கு நன்மைகள் ஏற்பட வழி உண்டாகும். நாடாளுமன்றத்திலே ஒரு பலம் பொருந்திய அணியாகக் குரல் எழுப்ப முடியும். இது வரை காலம் அவசர காலச் சட்டங்கள் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட பொழுது, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரிந்து நின்றனர். இனிமேல் ஒரே குரலில் தமிழ் மக்களைப் பாதிக்கும் விடயங்களில் குரல் எழுப்ப முடியும். தமிழீழ மக்களின் போராட்டத்தைப் பயங்கரவாதம் என்று கூறுவதற்கெதிராகத் தமிழ் மக்கள் அனைவரும் ஒத்த குரலில் எதிர்க்குரல் எழுப்பித் தமிழ் மக்களது போராட்டம் உரிமைப் போராட்டம் என்று உலகத்துக்கு உணரவைக்க முடியும். இதற்கெல்லாம் இலங்கைத் தீவில் வாழுகின்ற அனைத்துத் தமிழ் பேசும் மக்களும் ஓரணியாகத் திரளுவதே வழியாகும்.

தமிழ் மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்த அரசு பாவிக்கும் கருவி அமைச்சர் பதவிகளேயாகும். இலட்சிய அடிப்படையில் கட்சிகள் வளர்க்கப்பட்டிருந்தால், இந்த இடைஞ்சல் ஏற்பட்டிருக்கமாட்டாது. இலங்கைத் தமிழரசுக் கட்சி தொடங்கப்பட்ட காலத்திலிருந்து இக்கொள்கையையே செல்வா பின்பற்றி வந்தார். அதனால் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்க முடியவில்லை. மக்களுக்குத் தெரியாதவர்களை அமைச்சர்களாக்கியதால், அவர்களால் மக்களைப் பிளவுபடுத்த முடியவில்லை. ஆனால், மலையகத் தலைமையும், இஸ்லாமியத் தலைமையும் அமைச்சர் பதவிகளை ஏற்றதாலேயே அமைச்சர் பதவிகளுக்கு ஆசைப்பட்டவர்கள், ஆட்சி மாற்றங்களின் போது பிரிந்து சென்று தமது கட்சியைப் பிளவுபடுத்துகின்றனர். இதனால் தாம்சார்ந்த கட்சியை மட்டுமல்ல, தாம் சார்ந்த இனத்தையும் பிளவுபடுத்துகின்றனர் என்பதை அறியாமல் அல்லது அறிந்தும் அக்கறைப்படாமல் நடந்துகொள்கின்றனர். இவ்வாறான செயல்கள் ஒரு இனத்தை முற்றாக அழித்து விடும் ஆபத்தைக் கொண்ட தாகும். மலையகத் தலைமை இந்த ஆபத்தைத் தற்பொழுது உணர்ந்து கொண்டிருப்பது வரவேற்கத்தக்கதே.

இதே போன்ற எண்ணங்களும், கருத்துக்களும் இஸ்லாமிய மக்களிடமும், தலைவர்களிடமும் ஏற்பட வேண்டும். இவ்வாறு ஏற்பட்டால் தமிழ் பேசும் இனம் ஓரணியில், ஒற்றுமையுடன் தங்கள் உரிமைகளுக்காகக் குரல் எழுப்ப முடியும். வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்களும், இஸ்லாமிய மக்களும், மலையக மக்களும் ஒன்றாக இணைவது தமிழினத்துக்குப் பெரியவெற்றியாக அமையும். அதே போல் எதிரியும் இவ்வொற்றுமை கண்டு பயங்கொள்வான்.

மலையகத் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளைச் சந்தித்தது போன்று, இஸ்லாமியத் தலைவர்களும் வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளைச் சந்தித்து தமிழ்-இஸ்லாமிய ஒற்றுமையை நிலைநிறுத்தி விடவேண்டும். இது தற்போது காலத்தின் கட்டாயமாகும். ஏனெனில், சிங்களப் பேரினவாதம் தமிழ்-இஸ்லாமிய உறவைச் சீரழிப்பதில் முனைப்புடன் செயற்படுகின்றது. இதை முறியடித்து முஸ்லிம் மக்களை அதிலிருந்து காப்பாற்ற வேண்டியது முஸ்லிம் தலைவர்களுடைய கடமையாகும். மக்களின் உரிமைகளுக்கு முதலிடம் கொடுத்து பொதுநோக்கோடு செயற்பட்டால் இவ்வொற்றுமை விடிவை உண்டாக்கும். இலங்கைத்தீவில் வாழுகின்ற தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒற்றுமைப்படுவது பேரினவாதிகளுக்கு எரிச்சலை ஏற்படுத்தக் கூடும். அதேபோன்று இந்திய அரசும் இவ்வொற்றுமையை விரும்பாது என்பதும் யாவரும் அறிந்ததே. ஆனால், ஆறுமுகன் தொண்டமான் இந்தியாவிலிருந்து இலங்கைக்குத் திரும்பிய பின்னர் அவரது காங்கிரசில் ஏற்பட்ட குழப்பங்கள் அவருக்குப் பெரிய நெருக்கடியை உண்டாக்கியிருந்தது. அவர் மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரனைச் சந்தித்து அந்த நெருக்கடிகள் பற்றி உரையாடியுள்ளார். அதன் பின்னரே தமிழீழ விடுதலைப் புலிகளைச் சந்திக்க அவர் கிளிநொச்சிக்குச் சென்றுள்ளார். தொண்டமானின் இந்த நகர்வு இந்திய அரசுக்குத் தெரியாமலே நடந்திருக்கக் கூடும். தொண்டமானும் இந்திய அரசின் ஆதரவைப்பற்றிக் கவலைப்படாமல்தான் இந்த நகர்வை மேற்கொண்டதாகத் தெரிகிறது. ஆனால், தொண்டமான் கிளிநொச்சிக்கு வந்து திரும்பிய பின்னர் சிறிலங்காவில் திடீரென ஒரு நகர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்திய அரசு மலையக மக்களும், தமிழீழ மக்களும் ஒற்றுமையாவதை விரும்பவில்லை என்பதனைத் தனது செயல் மூலம் காண்பித்துள்ளது. சிறிலங்காவின் ஜனாதிபதிக்கு இந்தியத் தூதுவர் நிருபமாராவ் விருந்துக்கு ஏற்பாடு செய்து, அவ்விருந்தில் கலந்து கொள்ளுமாறு ஆறுமுகன் தொண்டமானுக்கும் அழைப்பு விடுத்து, மகிந்தவையும், தொண்டமானையும் சந்திக்கவைத்துள்ளார். அங்கு என்ன பேசப்பட்டன என்பது வெளியே தெரிவிக்கப்படவில்லை. ஆனால் என்ன பேசப்பட்டிருக்கும் என்பது ஊகிக்கக் கூடியதே.

ஆனால், வன்னியில் பேச்சுக்களை முடித்த பின்பு ஊடகவியலாளர்களிடம் தொண்டமான் குறிப்பிட்டவைகள் இதயத்திலிருந்து வந்திருந்தால், அவை உறுதியாக இருக்கும்என்று நம்பலாம்!

'சிங்கள மக்கள் ஒன்றிணைந்து செயற்படும் பொழுது தமிழ் மக்கள் ஒன்றிணைந்து செயற்படக்கூடாதா?... தற்போது தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்... சிங்கள இனவாத அரசாங்கத்தில் சிங்களவர்கள் ஒன்றாக இருக்கும் நிலையில் ஏன் தமிழ்க் கட்சிகள் ஒன்றாக இணைந்து செயற்பட முடியாது?...' என்று கேள்வி மூலம் பதிலளித்த தொண்டமான், சந்திப்பில் ஏதாவது தீர்மானம் எடுத்தீர்களா என்று கேட்டதற்குப் பொறுத்திருந்து பாருங்கள் எனக் கூறியுள்ளார்.

எனவே, தொண்டமான் இவ்வாறு கூறிய. பின்னர் இந்தியத் தூதுவரின் முயற்சியால் மகிந்தவைச் சந்தித்துள்ளார். இது எங்கே கொண்டு சென்று விடும் என்பதை ஆறுமுகன் தொண்டமான்தான் அறிவார்.

தமிழ் மக்களின் ஒற்றுமைக்கான முயற்சியில் தான் முன்வைத்த காலைத் தொடர்ந்து எடுத்து வைப்பார் தொண்டமான் என்பதே அனைவரதும் நம்பிக்கை. மலையகத் தமிழ் மக்களின் எதிர்காலம் கிளிநொச்சிப் பயணத்தின் மூலமே விடிவடையும் என்பதைத் தொண்டமான் உணர்ந்தால் பலன் நிச்சயம் உண்டாகும். தவறினால் மலையக மக்களைச் சிங்களப் பேரினவாதம் விழுங்கிவிடும் என்பது தவிர்க்க முடியாததாகும்.

இதே நேரம் சிறிலங்கா நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு திங்களுக்கு நீடிக்கும் பிரேரணையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆட்சியாளர்களுடன் சேர்ந்து வாக்களித்தமை ஆறுமுகன் தொண்டமானின் இரட்டை நிலையைக் காட்டுகின்றது என்றே எண்ணத் தோன்றுகிறது.

யாழ்ப்பாணத்தில் இராணுவ அட்டூழியம் சொல்லொணாத் துயரை மக்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. புங்குடுதீவில் தர்சினி என்ற இளம் பெண் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டு, கல்லுடன் கட்டிக் கிணற்றில் போடப்பட்டுள்ளார். பல்கலைக்கழகக் கல்விச் சமூகம் அமைதி வழியில் சென்ற பொழுது துப்பாக்கிச் சூடு நடத்தி, அடித்து விரட்டப்பட்டுள்ளனர். இவ்வாறு அவசர காலச்சட்டம் தமிழ் மக்கள் மீது அடாவடித்தனங்களை செய்து கொண்டிருக்கும் பொழுது, அதை என்ன காரணம் கொண்டு தொண்டமான் ஆதரித்தார் என்பதற்குப் பதில் அவர்தான் கூற வேண்டும். தனக்கு எதிராக ஏற்பட்டுக் கொண்டிருக்கும் ஊழல்களிலிருந்து மீள்வதற்காகவே தமிழ் மக்கள் ஒற்றுமைப் பட வேண்டும் என்று குரல் கொடுத்துக் கொண்டு வன்னிக்கு ஓடினார் என்று பரவலாக ஒரு கதை அடிபடுவதும் கவனத்தில் கொள்ள வேண்டியதாகவே உள்ளது.

எனவே, தொண்டமான் தன் நிலையில் தூய்மையான நிலைப்பாட்டை எடுத்துக் கொள்ள வேண்டும். வெறுமனே கட்சிகள் ஒன்றிணைவதால் பலன் ஏற்படப் போவதில்லை. இலட்சியங்கள் ஒன்றாயிருத்தல் வேண்டும். எனவே தனது இரட்டை நிலையை விடுத்து இலட்சியத்துக்காக உழைக்க முன்வருவாரா?

பரணி

# புங்குடுதீவு படுகொலைக்கு எதிராக முகமாலையில் கண்டனப் பேரணி!

கிளிநொச்சி —

புங்குடுதீவு - மடத்தடியில் கடற் படையினரால் இளையதம்பி தர்சினி பாலியல் வல்லுறவுக் குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து கிளிநொச்சி- பச்சிலைப்பள்ளி பெண்கள் அமைப்புக்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளன.


நேற்று முற்பகல் 11 மணியளவில் இத்தாவில் சந்தியிலிருந்து ஆரம்பித்த இந்தப் பேரணி -முகமாலை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் நிறைவுபெற்றது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பொறுப்பதிகாரியிடம் - பெண்கள் அமைப்புக்கள் தமது கண்டனங்கள் அடங்கிய மனுக்களைக் கையளித்தனர். அத்துடன் பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் சிவசிறியிடமும் மனுக்களைக் கையளித்தனர்.

கிளிநொச்சி - பச்சிலைப்பள்ளி பெண்கள் அமைப்புக்கள், கிராமிய மாதர்சங்க அமைப்புக்கள் இணைந்து நடத்திய இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கான பெண்கள் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் இலங்கை படையினரால் தமிழ்ப் பெண்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளுக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் கலந்துகொண்டனர்.





# விரக்தியடைந்த நிலையில் முப்படை ஒப்பந்த ஊழியர்கள்!

கொழும்பு —

முப்படையில் இருக்கும் ஒப்பந்த மற்றும் சமயா சமய ஊழியர்களின் சேவை நிரந்தரமாக்கப்படாததால் அவர்கள் தற்போது மிகவும் விரக்தியடைந்த நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இராணுவம், கடற்படை, விமானப்படையில் இருக்கும் பகுதி நேர சமயாசமய ஒப்பந்த பணியாளர்கள் 10 வருடங்களாக நிரந்தர நியமனமின்றி கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

யுத்த காலப்பகுதியில் இராணுவத்தினருக்குத் தேவையான வசதிகளை வழங்கும் சமயா சமய ஒப்பந்த ஊழியர்களுக்கு சேவைகளுக்காக மாதாந்தம் 6000 ரூபா வழங்கப்படுகிறது.

தங்கள் உயிரைப் பணயம் வைத்து பலாலி, ஆனையிறவு, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, அம்பாறை, கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களில் சேவையாற்றிய தங்களின் சேவையை நிரந்தரமாக்குமாறு அவர்கள் மகிந்த ராஜபக்ஷவிடம் வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

# மட்டக்களப்பு காட்டில் சடலம் கண்டெடுப்பு!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு - நாவற்கேணி காட்டுப் பகுதியிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று முற்பகல் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

சடலத்துக்கு அருகில் காணப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரத்தில் இவர் கண்டி மடதெனியவைச் சேர்ந்த மாரசிங்க முதியன் சலாகே சுகத் மங்கள மாரசிங்கா (வயது 30) என அடையாளம் காணப்பட்டுள்ளது.

பொதுமக்களிடம் கிடைத்த தகவலையடுத்து குறித்த சடலம் மீட்கப்பட்டதாகவும், சடலத்தில் அடிகாயங்கள் காணப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# 5 தமிழ் இளைஞர்கள் திருமலையில் கைது!

திருகோணமலை - பட்டிகியவில் இராணுவத்தினர்மீது நேற்றுமுன் தினம் இரவு 8.15 மணியளவில் நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலையடுத்து, நடத்தப்பட்ட தேடுதல்களில் தமிழ் இளைஞர்கள் ஐவர் கைதுசெய்யப் பட்டனர்.

யோகராஜன் (வயது 26), சந்திரகுமார் (வயது 23), சிவயோகராஜா (வயது 50), நாகேந்திரன் (வயது 18), பிரசன்னா (வயது 16) ஆகியோரே சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப் பட்டு திருகோணமலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

# ஐ.தே.கட்சியின் மறுசீரமைப்பு 30 நாட்களுக்குள் இடம்பெறும்

கொழும்பு —

ஐக்கிய தேசியக் கட்சியை நடத்தும் அதிகாரம் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, உப தலைவர் கரு ஜயசூரிய மற்றும் சில நிர்வாகிகளுக்கு இடையே பகிர்ந்தளிக்கும் வகையிலான செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

ரணிலுக்கும், கரு ஜயசூரியவுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின்போது கட்சியை நடத்துதல் மற்றும் அதன் பொறுப்புக்கள் குறித்து கூடுதல் கவனம் செலுத்துதல் ஆகிய விடயங்கள் விவாதிக்கப்பட்டுள்ளன.

கட்சியின் இத்தகைய மறுசீரமைப்பு நடவடிககைகள் குறித்து இருவருக்குமிடையில் பலசுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் தங்களின் ஆலோசனைகளை முன்வைத்துள்ளனர்.

கட்சியின் அரசியல் தீர்மானங்கள் மேற்கொள்ளும்போது கடைநிலையிலிருந்து உயர்நிலை வரையிலானவர்களின் ஆலோசனைகளைப் பெறல், கட்சியின் தேசிய மட்டத்திலான செயற்பாடுகளுக்குப் புதியவர்களை நியமித்தல், தவிசாளர் மற்றும் பொதுச் செயலாளர் பதவிகளை மக்கள் பிரதிநிதிகள் வகிப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையில் திருத்தங்களைச் செய்தல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ஐக்கிய தேசிய கட்சி தீர்மானித்துள்ளது.

இந்த அனைத்து யோசனைகளும் அடங்கிய மறுசீரமைப்புத் திட்டம் 30 நாட்களுக்குள் முன்வைக்கப் பட்டு செயற்படுத்தப்படும் என்றும் அந்தக்கட்சி தெரிவித்துள்ளது.

# மயூரணி கொலைவழக்கு பாலபிரசன்னா விடுதலை!

கொழும்பு —

இலங்கை மாணவி மயூரணி கொலை செய்யப்பட்ட வழக்கில் 24 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப் பட்ட இலங்கை மாணவர் பாலபிரசன்னவை மதுரை உயர்நீதிமன்றக் கிளை விடுதலை செய்துள்ளது.

இலங்கையைச் சேர்ந்த தியாகராஜன் என்பவரது மகள் மயூரணி மதுரையிலுள்ள அம்பிகா கல்லூரியில் படித்துவந்தார். அந்தக் கல்லூரியின் உரிமையாளரான சோலமலைத் தேவரின் வீட்டில் அவர் தங்கியிருந்தார்.

இந்த நிலையில் வீட்டுக்குள் மயூரணி மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டுக் கிடந்தார். இது தொடர்பாக சோலைமலைத் தேவர் அவரது மனைவி மற்றொரு இலங்கை மாணவர் பாலபிரசன்னா ஆகியோர் கைதுசெய்யப்பட்டனர்.

மயூரணிக்கு சோலைமலைத் தேவர் பாலியல் ரீதியாக துன்புறுத்தல் செய்து வந்ததாகவும் பாலபிரசன்னாவை விட்டு மயூரணியைக் கொலை செய்யச் சொன்னதே தேவர் தான் என்றும் புகார் எழுந்துள்ளது. முதலில் தேவர் மீதும் அவரது வீட்டு வேலையாட்கள் மீதும் கைது நடவடிக்கை எடுத்த பொலிஸார் பின்னர் தேவரைக் காப்பாற்றும் வேலையில் இறங்கியதாகக் கூறப்பட்டது.

இந்தநிலையில் இந்த கொலை வழக்கு விசாரணை மதுரை நீதிமன்றத்தில் நடைபெற்றது. அதனை விசாரித்த நீதிமன்றம் பால பிரசன்னாவைத் தவிர மற்ற அனைவரையும் விடுதலை செய்தது. பாலபிரசன்னாவுக்கு 24 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இதற்கிடையே இந்த விவகாரத்தில் உண்மையை மறைக்கவும் உண்மைக் குற்றவாளிகளைத் தப்ப வைக்கவும் பொலிஸ் முனைவதாக கூறிய மயூரணியின் மாமா மோகன் தாஸ் வழக்குத் தொடர்ந்தார். விசாரணையை சிபிஐக்கு மாற்றவும் மோகன்தாஸ் கோரியிருந்தார்.

அதேபோல தனக்கு விதிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து பால பிரசன்னா மதுரை உயர் நீதிமன்றக் கிளையில் மேல் முறையீடு செய்தார். இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் மிஸ்ரா, ராமலிங்கம் ஆகியோர் அடங்கிய அமர்வு நேற்று பரபரப்புத் தீர்ப்பை அளித்தது.

பாலபிரசன்னாவிற்கு விதிக்கப்பட்ட தண்டனை ரத்துச் செய்து அவரை விடுதலை செய்வதாக நீதிபதிகள் தங்களது தீர்ப்பில் தெரிவித்தனர்.

# இந்திய - இலங்கை நாடுகளிடையே நாடாளுமன்ற நண்பர்கள் உருவாக்கம்

கொழும்பு —

இந்திய - இலங்கை நாடாளுமன்ற நண்பர்கள் அமைப்பு இலங்கை நாடாளுமன்றில் தொடங்கப்படவுள்ளது.

இந்தியத் தலைநகரர் புதுடெல்கியில் இந்த அமைப்பு உருவாக்கப் பட்டது. இதில் இந்தியாவின் மக்களவையைச் சேர்ந்த 15 உறுப்பினர்களும், மாநிலங்கள் அவையைச் சேர்ந்த 7 உறுப்பினர்களும் இடம் பெற்றுள்ளனர்.

இந்த அமைப்பின் தலைவராக பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தேர்வு செய்யப்பட்டுள்ளார். துணைத் தலைவர்களில் ஒருவராக ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தேர்வாகியுள்ளார். கணக்காளராக ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே செயற்படுவார்.

இரு நாட்டிலும் தேர்ந்தெடுக்கப் பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும், இரு தரப்பினரது இராஜதந்திர உறவுகளை முன்னெடுக்க இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

## சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு

# விடுதலைப்புலிகள் தமது நிதியிலிருந்து வீடுகளை அமைத்து வருகின்றனர்

## இணையத்தளம் தெரிவிப்பு

கொழும்பு —

தங்களது சொந்த நிதியத்திலிருந்து சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு வீடுகளை விடுதலைப்புலிகள் அமைத்து வருவதாக ப்ளும்பேர்க் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த இணையத்தளச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

சுனாமியில் உயிர் பிழைத்தோருக்கான வீடுகளை விடுதலைப்புலிகள் தங்களது சொந்த நிதியத்திலிருந்து தங்கள் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அமைத்துத் தருகின்றனர்.

மிகவும் அவசியமாக தேவைப் படுகின்ற நிதி உதவியானது இலங்கைத் தீவுக்கு இன்னும் சென்றடையவில்லை.

போராளிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள தமிழர்கள் கடந்த டிசெம்பர் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமியால் வீடுகளை இழந்து தற்காலிக முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். வெளிநாடு வாழ் தமிழர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவியுடன் அவர்களுக்கான மீளமைப்புப் பணிகள் செய்யப்பட்டு வருவதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தெரிவித்துள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கில் நிரந்தர வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இலங்கை அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் இணைந்து மீளமைப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று சர்வதேச சமூகம் நம்பிக்கை கொண்டு பொதுக்கட்டமைப்பை உருவாக்கியது. 3 பில்லியன் அமெரிக்க டொலர் அளவிற்கான நிதி உதவி அளிக்க ஒப்பந்தம் மேற் கொள்ளப்பட்டபோதும், கடந்த ஜூலையில் இணைந்து செயற்படுகின்ற முறை முடங்கியது. இதனால் 2002 ஆம் ஆண்டு போர்நிறுத்த ஒப்பந்தத்துக்கு ஆபத்து ஏற்பட்டது.

பொதுக்கட்மைப்பு நடைமுறைப் படுத்தப்பட்டிருந்தால் மேலதிக நிதி கிடைக்கப்பெற்று ஒட்டுமொத்தமாக இலங்கைக்கும் பயனாக இருந்திருக்கும் என்கிறார் புனர்வாழ்வுக் கழகத்தின் அதிகாரிகளில் ஒருவரான ஜூலியா கியூமே.

சுனாமி மீளமைப்புக்கான பொதுக் கட்டமைப்பு கடந்த ஜூலை 15 ஆம் திகதி நீதிமன்றினால் முடக்கப்பட்டது. இந்த பொதுக்கட்டமைப்புக்கு எதிராக ஜே.வி.பி வழக்குத் தாக்கல் செய்தது. பொதுக்கட்டமைப்பை முன்னைய சந்திரிகா அரசாங்கம் செயற்படுத்த எதிர்ப்புத் தெரிவித்து ஆளும் கூட்டணி அரசிலிருந்து ஜே.வி.பி வெளியேறியது.

சுனாமியால் பாதிக்கப்பட்டபோது அனைத்து சர்வதேச சமூகமும் தன்னெழுச்சியாக உதவமுன்வந்த போதும், அது பயன்படவில்லை என்று இலங்கையின் கொள்கை ஆய்வு நிறுவன அறிக்கை கூறுகிறது.

இலங்கை அரசாங்கத்தின் மீளமைப்புத் திட்டத்தின் கீழான 919 மில்லியன் டொலரில் 58 மில்லியன் டொலர் அளவிற்கு தமிழர்கள் வாழ்கின்ற புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை உள்ளடக்கிய யாழ். முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சிப் பகுதிகளுக்குச் சென்றடைந்துள்ளது என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க வெளியுறவு செயலர் அடுத்தமாதம் இலங்கை வருகை

கொழும்பு —

அமெரிக்க வெளியுறவுச் செயலர் கொண்டலீசா றைஸ் ஜனவரி மாத முற்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் மங்கள சமரவீர கூறியதாவது -

அமெரிக்க அமைச்சரின் பயணத்தின் மூலம் இலங்கைக்கும் - அமெரிக்காவுக்குமிடையிலான உறவுகள் மேலும் வலுவடையும்.

இந்தியாவுக்கு பயணம் செய்து பிரதமர் மன்மோகன்சிங்கையும் அமைச்சர்களையும், அதிகாரிகளையும் சந்தித்ததன் மூலம் பல நன்மைகள் கிடைத்துள்ளன.

இலங்கையின் இறைமை பாதிக்காத வகையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு ஏற்படவேண்டும் என்று இந்தியா விரும்புகின்றது.

இந்தியாவுடன் உறவுகளைப் பேணும் அதேவேளை, ஐரோப்பிய ஒன்றியத்துடனும், ஜப்பானுடனும் எமது உறவுகளை மேலும் வலுப் படுத்திக்கொள்ள வேண்டும்.

இதற்கு வெளிவிவகார அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

ஐ.நா.செயலாளர் நாயகம் பதவிக்கு ஜயந்த தனபால போட்டியிடுகின்றமையால். அவருக்கு ஆதரவாக பிரசாரங்களை எமது அமைச்சு மேற் கொண்டு வருகிறது எனத் தெரிவித்தார்.

இதனிடையே இத்தாலி நாட்டின் முன்னாள் பிரதமர் அன்டோனியோ அமந்தோ தலைமையிலான குழு அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளது.

இத்தாலிய நிதியுதவி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும் சுனாமி மீளமைப்புத் திட்டங்களை இந்தக் குழு பார்வையிடும்.

இத்தாலி நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் கடந்த வாரம் இலங்கை வருகை தந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

# புதிய ராணுவப் பேச்சாளராக பதவியேற்றார் சமரசிங்க!



கொழும்பு—

புதிய இராணுவப் பேச்சாளராகவும் - இராணுவத் தலைமையக ஊடகப் பிரிவு பணிப்பாளராகவும் பிரிகேடியர் எஸ்.ஏ.பி.பிரசாத் சமரசிங்க நேற்று பதவியேற்றார்.

இராணுவப் பேச்சாளராக இருந்த பிரிகேடியர் தயா ரத்னாயக்க - அமெரிக்கப் பயிற்சியை முடித்துத் திரும்பியவுடன் வெலிக்கந்த 23 ஆவது டிவிசன் தளபதியாக பொறுப்பேற்கவுள்ளதால் - புதிய இராணுவப் பேச்சாளராக பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இராணுவத்தில் 25 வருட காலம் பணியாற்றிய இவர் - சமிக்ஞைப் பிரிவின் சிரேஷ்ட அதிகாரியாவார். 1980 இல் இராணுவத்தில் இணைந்த இவர் கொத்தலாவல பாதுகாப்பு கல்லூரியில் - பாதுகாப்பு கற்கைகளில் முதுமாணிப்பட்டம் பெற்றவராவார்.

திருகோணமலை தெற்கு 222 ஆவது பிரிகேட் தளபதியாக இருந்த இவர் - இரண்டு பிரிகேட்களின் தளபதியாக யாழ்ப்பாணத்திலும், வன்னியிலும் பணியாற்றியி ருந்தார்.

அத்துடன், திருகோணமலை 22 ஆவது டிவிசனின் பொது அலுவலராகவும், இராணுவத் தலைமையக நடவடிக்கைகள் பணியகத்தின் பொது அலுவலராகவும், இராணுவ உதவிச் செயலாளராகவும், சமிக்ஞைப் படைப் பிரிவு தலைமையக கொமாண்டராகவும் பணியாற்றியுள்ளார்.

இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், இங்கிலாந்து ஆகிய நாடுகளில் விசேட பயிற்சிகளைப் பெற்றதுடன் -

பிலிப்பைன்ஸ் ஹவாய் உள்ளிட்ட இடங்களில் நடைபெற்ற இராணுவக் கருத்தரங்குகளிலும் பங்குபற்றியுள்ளார்.

## இக்கட்டான நிலைக்குள்...

கடந்த மூன்றரை வருடங்களுக்கு மேலாக இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் அமுல்படுத்தப்பட்டுவரும் யுத்தநிறுத்த உடன்படிக்கை - வடபகுதியில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு சூழலில் மிகவும் ஆபத்தான கட்டத்தை எட்டியுள்ளது.

எனது கருத்துப்படி - இலங்கையில் தற்போது எழுந்துள்ள சூழல் மிகவும் அபாயகரமானது. அண்மையில் யாழ்.குடாநாட்டில் இடம்பெற்ற சம்பவங்களுக்கும், கடந்த இரண்டு நாட்களாக மன்னாரில் இடம்பெற்ற சம்பவங்களும் எமக்கு வருத்தத்தை அளிக்கிறது.

இந்த நாட்டிலுள்ள சில சக்திகள் யுத்தநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரண்டு தரப்பினரில் ஒருவரைச் சீண்டிவிட முயற்சிக்கின்றன. இதனால் யுத்த நிறுத்த உடன்படிக்கை மிகவும் அபாயகரமான சூழலை எட்டியுள்ளது.

படையினருக்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையில் கீழ்மட்ட நேரடிச் சந்திப்பை ஏற்படுத்துவதற்கு மேற்கொண்டுவரும் முயற்சிளைப் போன்று இரண்டு தரப்பினரிடமிருந்தும் இது தொடர்பான சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை.

இந்த அமைதியற்ற சூழலுக்கு அரசும், விடுதலைப் புலிகளும் ஒருவரையொருவர் குற்றச்சாட்டுக்களைச் சுமத்திவருகின்றனர். அரசும், விடுதலைப் புலிகளும் உயர்மட்டப் பேச்சுக்களை விரைவில் நடத்த தயாராக இருக்கின்றபோதிலும், அவ்வாறு அந்தப் பேச்சுக்கள் இடம்பெறுவதற்கு களத்தில் அமைதியான சூழல் இன்றியமையாதது.

மன்னாரில் இடம்பெற்ற சம்பவத்தைப் பார்வையிட எமது கண்காணிப்பாளர்கள் சென்றபோதும், அவர்களால் உரிய இடத்துக்குச் செல்லமுடியவில்லை. இதற்குக் காரணம் படையினர் அந்தப்பகுதிக்கு எவரையும் செல்லவிடாமல் தடுத்திருந்தனர். எனினும் பின்னர் கண்காணிப்பாளர்கள் சென்று பார்வையிட்டனர்.

இந்தத் தாக்குதல் ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் அபாயச் சூழ்நிலைக்கு மேலும் வலுச்சேர்க்கிறது. இது எந்தளவு தூரம் நீடிக்கும், இதனை எந்தளவு தூரம் படையினர் பொறுத்துக் கொண்டிருப்பார்கள் என்று எனக்குத் தெரியாது.

வடபகுதியில் அசம்பாவித சம்பவங்கள் இடம்பெறும்வேளை அந்த இடத்துக்குப் பதற்றம் தணியும் வரை கண்காணிப்பாளர்களைச் செல்ல வேண்டாமெனப் பணித்திருக்கிறேன். ஏனெனில் தொண்டர்களாகக் கடமையாற்றவே நாம் இங்கு வந்துள்ளோமே தவிர சாவதற்காக அல்ல எனத் தெரிவித்தார்.

## கடற்படையின்...

எஸ்.பிரான்சிஸ் (வயது 35) இருவரும் நேற்றிரவு மன்னார் ஆதார வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டனர்.

இதேவேளை பேசாலை வைத்தியசாலையில் இடப்பற்றாக்குறை நிலவுவதால் 14 பேர் மட்டும் விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் ஏனையோர் அருகிலுள்ள பேசாலை வெற்றிநாயகி தேவாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் அப்பகுதியிலுள்ள மக்களும் அச்சம் காரணமாக மேற்படி தேவாலயத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

இதேவேளை, துள்ளுக்குடியிருப்பு நூறு வீட்டுத்திட்டப் பகுதியில் கடற்படையினரால் பத்து வீடுகள் தீயிட்டு எரிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

மேலும், சம்பவ இடத்துக்கு கண்காணிப்புக்குழு உள்ளிட்ட எவரையும் உடனடியாகச் செல்ல கடற்படையினர் அனுமதிக்கவில்லை. அத்துடன், மன்னார் நகருக்கு கிறிஸ்மஸ் தினத்துக்கு பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு சென்ற ஆயிரத்துக்கும் அதிகமானோர் தமது சொந்த இடத்துக்கு திரும்பமுடியாமல் புனித சவேரியார் தேவாலயத்தில் தங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ்.குடாநாட்டில்...

நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் கணவனும் மனைவியும் காயமடைந்தனர். உரும்பிராயைச் சேர்ந்த கே. ஜெயப்பிரகாஷ் (வயது 23) இவரது மனைவி கேதனி (வயது 20) ஆகிய இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

தனது 11 மாதக் குழந்தையை சுகயீனம் காரணமாக அதிகாலை வேளை கோப்பாய் வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றவேளை கரந்தன் சந்தியில் பதுங்கியிருந்த இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இவர்கள் இருவரும் காயமடைந்தனர்.

இதன்போது தாக்குதலுக்குள்ளான ஒட்டோவைத் தள்ளியபடியே வீட்டிற்குச் சென்று காலை 6 மணிக்கு வைத்தியசாலைக்கு வந்ததாகக் காயமடைந்த இருவரும் தெரிவித்தனர்.

நேற்றிரவு 7.30 மணியளவில் கோண்டாவில் உப்புமடம் சந்தி, மருதனார்மடம் ஆகிய இரு இடங்களிலும் ஒரே நேரத்தில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை மருதனார்மடம் சந்தியில் இராணுவத்தினர் மீது இனந்தெரியாத நபர்கள் நடத்திய கைக்குண்டுத் தாக்குதலில் ஒரு இராணுவச் சிப்பாய் காயமடைந்தார்.

குளப்பிட்டி சந்தியில் நின்றிருந்த இராணுவத்தினர் மீது நேற்றிரவு இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதேவேளை நல்லூர் கைலாசப் பிள்ளையார்கோவில் காவலரண் மீதும் கைக்குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதல்களில் படையினர் தரப்பில் உயிரிழப்புகள் ஏற்பட்டதாக கூறப்பட்டபோதும் இந்தத் தகவல்களை உறுதிப்படுத்த முடியவில்லை.

இதேவேளை நேற்று நல்லூர் கோவில் வீதியிலுள்ள சிறுவர் பாதுகாப்பு நிதியம் மீது இராணுவத்தினர் நடாத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் காயமடைந்ததாக கூறப்படுகிறது. இதனையடுத்து யாழ்.சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினை மூடுமாறு அந்த நிறுவனத் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

யாழ்.அரசாங்க அலுவலரின் வீட்டு உதவியாளர், நல்லூர் பிரதேச செயலக வாகனச் சாரதி அ.அருட்செல்வன், அலுவலக ஊழியர் க.மயூரன் ஆகிய இருவரும் இராணுவத்தினரால் தாக்கப்பட்டதாக தெரியவருகிறது. இவர்கள் மூவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

## இணைத் தலைமை...

விடுதலைப் புலிகள் போர் நிறுத்தத்தை தொடரவுள்ளனரா அல்லது அதனை தொடர மாட்டார்களா என்பதை அவர்களுடன் கலந்துரையாடி அறியத்தருமாறு இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத்தலைமை நாடுகளின் தூதுவர்களுடனான இந்த விசேட சந்திப்பின்போது பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கேட்டுக் கொண்டுள்ளார்.

அங்கு அவர் மேலும தெரிவித்ததாவது -

இந்த நாட்டின் மக்கள் யுத்தநிறுத்தம் ஒன்று உள்ளதா என்பதை அறிவிரும்புகின்றனர். எனவே யுத்த நிறுத்தம் தொடர்பாக பேசுவதற்கு விடுதலைப் புலிகள் குறிப்பிட்ட திகதியை அறிவிக்கவேண்டும். இவ்வாறு அவர்கள் அறிவிக்கத் தவறும் பட்சத்தில் யுத்தநிறுத்தத்தை ஏற்றுக்கொள்வது சாத்தியமாக அமையாது என தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனுடன் கலந்துரையாடுவதற்காக இன்று கிளிநொச்சிக்கு செல்லவுள்ளனர். இதன்போது போர்நிறுத்தம் தொடர்பாக கலந்துரையாடுவதற்கான திகதியை அறிவிக்குமாறும் அவர்கள் விடுதலைப் புலிகளிடம் கோரவுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை இன்று கிளிநொச்சி வரவுள்ள இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகளை கிளிநொச்சிக்கு ஏற்றிச்செல்வதற்கு விமானப் படையினர் மறுப்பு தெரிவித்துள்ளனர்.

## மன்னாரில் கிளைமோர்...

துள்ளுக்குடியிருப்பு நூறு வீட்டுத் திட்டம் என்ற இடத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

சுமார் 32 கடற்படையினர் பயணம்செய்ததாகக் கூறப்படும் பஸ் ஒன்றும், டிரக் ஒன்றுமே தாக்குதலுக்கு உள்ளாகின. இதில் கடற்படையினரின் பஸ் வண்டி தீப்பிடித்து எரிந்து முற்றாக நாசமடைந்ததாகவும், டிரக் வண்டி முற்றாகச் சேதமடைந்ததாகவும் தெரியவருகிறது.

இந்தத் தாக்குதலின் பின்னர் 12 கடற்படையினரின் சடலங்களையும், காயமுற்ற 4 படையினரையும் தாம் மீட்டதாக கடற்படைப் பேச்சாளர் கொமடோர் ஜெயந்த பெரேரா தெரிவித்தார்.

எனினும் 16 கடற்படையினர் கொல்லப்பட்டதாகவும், 15 பேர் வரை படுகாயமடைந்ததாக நேற்றிரவு இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதல் தொடர்பாக இராணுவமும், கடற்படையினரும் முரண்பாடான தகவல்களையே வெளியிட்டன.

தொடரணியில் சென்ற பஸ் மற்றும் டிரக் என்பன தாக்கப்பட்டதில் 12 படையினர் உயிரிழந்ததாகவும், நால்வர் காயமுற்றதாகவும் கூறிய கடற்படைப் பேச்சாளர் இரு குண்டு வெடிப்புகள் நிகழ்ந்ததாகக் குறிப்பிட்டார்.

முதலாவது - கிளைமோர் தாக்குதல் என்றும், அடுத்தது வாகனக் கண்ணிவெடியாக அல்லது ஆர்.பி.ஜி. தாக்குதலாக இருக்கக்கூடும் என்றும் அவர் தெரிவித்தார்.

கிளைமோர் தாக்குதலால் பஸ் தீப்பிடித்து எரிய வாய்ப்பில்லை என்றும், இதனால் ஆர்.பி.ஜி தாக்குதலே நடத்தப்பட்டிருக்கவேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க கருத்து வெளியிட்டபோது -

மிக மிகக் கவனமாக நடத்தப்பட்ட தாக்குதல் என்பதுடன், மிகவும் திறமையாக நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதல் நடத்தியோர் 4 கிளைமோர்களைப் பொருத்தி வெடிக்க வைத்துள்ளனர். அத்துடன், 5 ஆர்.பி.ஜி செல்களும் ஏவப்பட்டதுடன், சிறிய ஆயுதங்கள் மூலமும் தாக்குதல் நடத்தப்பட்டது.

தாக்குதலின் பின்னர் 12 கடற்படையினின் சடலங்களும் காயமுற்ற நால்வரும் மீட்கப்பட்டனர். காயமுற்ற ஒருவர் பின்னர் மரணமானாரெனத் தெரிவித்தார்.

தாக்குதலுக்குள்ளான இரு வாகனங்களிலும் 32 படையினர் சென்றபோதும், 13 பேரே உயிரிழந்ததாக படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டபோதும் - 16 படையினர் உயிரிழந்ததாக ஒரு தகவலும், 26 படையினர் உயிரிழந்ததாக இன்னொரு தகவலும் தெரிவித்தன.

இதேவேளை காயமுற்ற 4 படையினர் மட்டுமே மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

சனத் பிரியந்த (29), ஹிந்தல (23), ஆனந்த பண்டார (52), ஜயந்த ஆகியோர் மட்டுமே மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இவர்களில் ஒருவர் பின்னர் மரணமானார்.

ஆனாலும், 17 படையினர் காயமுற்றதாக இன்னொரு தகவல் தெரிவித்தபோதும் - எஞ்சிய படையினர் எங்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர் என்பது தெரியவரவில்லை.

இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கை 20 இற்கும் அதிகமாகஇருக்கலாமென்று தகவல்கள் தெரிவித்தன.

கொல்லப்பட்ட படையினரின் சடலங்கள் தள்ளாடி கடற்படை முகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்டதாகத் தெரிய வருகிறது.

## புலனாய்வு...

துக்கு உத்தியோகபூர்வ கடமைக்காக சிவிலுடையில் சென்ற இவர், நேற்றுக் காலை 9.30 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் சடலமாக கண்டுபிடிக்கப்பட்டார்.

நீண்டகாலம் இராணுப் புலனாய்வுப் பிரிவில் பணியாற்றிய இவர் மலையகப் பகுதிகளில் தீவிரமாகச் செயற்பட்டு வந்தவராவார்.

இந்தச் சம்பவம் குறித்து கருத்து வெளியிட்ட இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க -

இந்தப் படுகொலைக்குப் புலிகளே காரணம் என்றும் குற்றம் சாட்டியதுடன், சில வாரங்கள் இடைவெளிக்குப் பின்னர் புலிகள் மீண்டும் இராணுவப்புலனாய்வு அதிகாரிகளை கொலை செய்ய ஆரம்பித்துள்ளதாகத் தெரிவித்தார்.

## இணைத்...

பல்வேறு சம்பவங்கள் தொடர்பாக இந்தச் சந்திப்பில் ஆராயவுள்ளதாகத் தெரியவருகிறது.

ஐரோப்பிய யூனியனின் இலங்கைத் தூதுவர் யூலியன் வில்சன், இங்கிலாந்து தூதுவர் ஸ்ரீவன் கிலான்ஸ், ஜப்பானியத் தூதுவர் அகியோ சுடா, நோர்வே பிரதித் தூதுவர் ஓட்வர் லிக்ரெய்ட் ஆகியோரே இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளவுள்ளனர்.

வவுனியாவரை ஹெலிகொப்டரில் சென்று பின்னர் ஏ-9 வீதி வழியாக இவர்கள் கிளிநொச்சி வரவுள்ளனர்.

## பொங்கியெழும்...

மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இனிவரும் காலத்தில் எமது தமிழ் மக்கள் மீது பிரயோகிக்கப்படும் இராணுவ அட்டூழியங்களுக்கு எதிர்வினையாக இதுபோன்ற பாரிய அழிவுகளை அரச படைகள் சந்திக்க நேரிடுமென எச்சரிக்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - இந்தத் தாக்குதலுக்கு யாழ். மாவட்ட பொங்கியெழும் மக்கள் படை நன்றி தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளது.

## செங்கலடி...

மேற்படி வீட்டினுள் நுழைந்த ஆயுதபாணிகள் - அங்கிருந்த இளைஞரை கடத்திச் செல்ல முயன்றனர். குடும்பத்தினர் தடுக்கவே தமது முயற்சியில் தோல்வியுற்ற ஆயுதபாணிகள் கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதில் மேற்படி இளைஞனின் சகோதரியான வள்ளிநாயகி தம்பிராசா (வயது-18) என்ற யுவதி உயிரிழந்தார்.

இவரது தந்தையாரான கந்தசாமி தம்பிராசா (வயது-51) காலில் காயமடைந்தார். இவர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பாதுகாப்புச்...

இந்தக் கூட்டத்தில் நாட்டில் பாதுகாப்பைப் பலப்படுத்த எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாக ஆலோசிக்கப்பட்டதாகவும் -

இத்தகைய தாக்குதல்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுப்பது குறித்து ஆராயப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை - இவ்வாறான தாக்குதல்கள் நடத்தப்படுவது சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்குத் தடையாக அமையுமென அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## பணிநிலை வெற்றிடம்

நமது ஈழநாடு நாளிதழின் ஆசிரிய பீடம், கணனிப்பிரிவு ஆகியவற்றில் பணிபுரிய தகைமையும், விருப்பும் உடையோரிடமிருந்து கீழ்க்காணும் பணிநிலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

### பயிற்சி பத்திரிகையாளர்கள் - செய்தியாளர்கள்

- மேற்படி பணிநிலைக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் சித்தி பெற்றவராக / அல்லது தோற்றியவராக இருக்கவேண்டும்.
- தமிழ்மொழியில் சிறப்புச்சித்தி பெற்றவர்களாகவும், பத்திரிகை மற்றும் செய்தித்துறையில் பணியாற்ற விருப்பார்வம் கொண்டவர்களாகவும், சுறுசுறுப்பான செயற்பாடு கொண்டவராகவும் இருக்க வேண்டும்.
- முன் அனுபவம் ஏதுமிருப்பின் முன்னுரிமை வழங்கப்படும்.

### கணனி இயக்குநர்கள்

- வேகமாக தட்டச்சு செய்பவராகவும்,
- Page Maker, Photoshop, Corel Draw ஆகியவற்றில் திறன் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
- கணனிப் பகுதியில் பயிலுநனராகப் பணிபுரிய விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம். பணியில் இணைந்து கொள்ள விரும்புவோர் உரிய தகைமைச் சான்றிதழ்களுடன் 27.12.2005 அன்று நேரில் சமுகமளிக்கவும். சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம்.

**நிர்வாக இயக்குநர்**
**நமது ஈழநாடு**
**267, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

இப்பத்திரிகை இல.267 ,நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 24.12.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# அரச கல்வி மற்றும் நிர்வாகம் சார் செயற்பாடுகளை 26 முதல் புறக்கணிக்க ஆசிரியர் சங்கம் அழைப்பு!

யாழ்ப்பாணம்

யாழ்.பல்கலைக்கழக சமூகத்தின் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து அரசுக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் முகமாக - எதிர்வரும் 26 ஆம் திகதி முதல், அனைத்து அரச கல்விசார், நிர்வாகம் சார்செயற்பாடுகளை புறக்கணிப்புச் செய்யுமாறு வடமராட்சி கிழக்கு தமிழர் ஆசிரியர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

இது குறித்து அவர்கள் அனுப்பியுள்ள செய்திக்குறிப்பில் -

அண்மையில் இளம் பெண் ஒருவர் புங்குடுதீவில் இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்திப் பின்னர் படுகொலை செய்யப்பட்டமையை மிகவும் வன்மையாக இந்தச் சங்கம் கண்டிக்கிறது.

மேலும், இந்திய வல்லாதிக்கத்தின் உதவியுடன் பலாலி விமான நிலையத்தை விஸ்தரிக்கத் திட்டமிட்டுள்ளமை, எமது தமிழ் தேசிய இறைமையை மிகவும் மோசமாகப் பாதிக்கும் செயல் என்பதனால் இதனை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம். உயர் பாதுகாப்பு வலயமெனக் கூறிக் கொண்டு அப்பாவிப் பொது மக்களின் வாழ்விடப் பரப்புக்களிலிருந்து, வெளியேறி, வாழ்வை மீளத் திருப்புவதற்கு வழிவிடுமாறு வேண்டுகிறோம்.

பல்கலைக்கழகம், கல்லூரிகள் ஆகியவற்றின் சூழலில் முற்றுகையிட்டுள்ள இராணுவம் உடனடியாக அந்தப் பகுதிகளில் இருந்து விலக்கப்பட வேண்டும்.

அப்பாவிப் பொதுமக்கள் மீதான கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகம், தாக்குதல்கள், கெடுபிடிகள், மிரட்டல்கள் யாவும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

சமாதான சூழலைக் குழப்பும் வகையில் இராணுவம் மேற்கொண்டு வரும் கைதுகள், சுற்றிவளைப்புகள் என்பன ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்ட போதும், எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேற்சொன்ன காரணங்களை முன்வைத்து வடமராட்சி கிழக்கு தமிழர் ஆசிரியர் சங்கம் சகல அரச நிறுவனங்களையும் பணிப்புறக்கணிப்புக்கு அழைத்துள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மருதனார்மடம் புற்றுநோய் காப்பகம் ஜனவரி 28இல் திறக்கப்படவுள்ளது

சுதுமலை

மருதனார்மடம் சபாபதிப் பிள்ளை வீதியில் அமைக்கப்பட்டு வரும் புற்றுநோய்க் காப்பகம் எதிர்வரும் ஜனவரி 28ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்காப்பகத்தை லண்டன் வாழ் ஈழத்தமிழர்கள் ஒன்றிணைந்து 'கேன்' எனும் தமிழர் அமைப்பின் ஊடாக நிர்மாணித்து வருவதாகவும், அவர்களது நிதிப் பங்களிப்புடனேயே இந்தக் காப்பகம் தொடர்ச்சியாகப் பராமரிக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

புற்றுநோய்க் காப்பக வளாகத்தில் தியான மண்டபமும் அமைக்கப்படவுள்ளது. எவ்வித மத வேறுபாடுகளுமின்றி புற்றுநோயாளர்கள் ஒன்று கூடிப் பிரார்த்தனையில் ஈடுபட முடியும்.

புற்றுநோயினால் அவதியுறும் நோயார்களுக்கு உணவு மற்றும் ஆலோசனைகளை வழங்கி, அவர்களை மகிழ்ச்சியாக வைத்திருக்கும் நோக்கில் இப்புற்றுநோய்க் காப்பகம் அமைக்கப்படுவதாகவும், இந்தக் காப்பகத்தால் புற்றுநோயாளர்கள் பலர் பயன் பெறவுள்ளதாகவும் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் தெரிவித்தார். (91)

# இளையோருக்கான கருத்தமர்வு

சுதுமலை

கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தின் வரணி கரம்பைக் குறிச்சி இளைஞர், யுவதிகளுக்கான ஒரு நாள் கருத்தமர்வு இன்று காலை 9.30 மணிக்கு வரணி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

புதிய ஆண்டில் இளையோர் செயற்பாடும், கல்வி மேம்பாடும் தொடர்பான கருத்தமர்வில் என்.சிறிதரன் வளவியலாளராகக் கலந்து கொள்ளவுள்ளார். இளையோர் குழுவினரால் மரநடுகையும் இடம் பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, மேற்படி நிறுவனத்தின் சமாதான ஊக்குவிப்பு குழுவினரால் நாவற்குழி சிறுவர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு- எதிர்வரும் 28ஆம்திகதி புதன்கிழமை நாவற்குழி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (91)

# யாழ்.பல்கலையின் அசமந்தப் போக்கு; பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் முறைப்பாடு!

யாழ்ப்பாணம்

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரி பட்டதாரி மாணவர்கள் 6 இற்கும் மேற்பட்டோர் தாம் வெளிவாரி பட்டப் பிரிவின் அசமந்தப் போக்கினால் பட்டதாரிகளுக்கான வேலை வழங்கலில் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட இந்தப் பட்டதாரிகளின் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

யாழ்.பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாக பட்டப்படிப்பை மேற்கொண்ட நாம் பட்டப்படிப்பை முடித்திருந்தும் தமது பட்டத்தை உறுதிப்படுத்தும் பட்டச் சான்றிதழை யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பிரிவு தாமதமாகவே வழங்கியது. வெளிவாரிப் பிரிவின் இந்த அசமந்தப் போக்கால் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சு பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்பு வழங்கலின் போது எமக்கு வேலைவாய்ப்பு வழங்க மறுத்துவிட்டது. இதனால் நாங்கள் பாதிக்கப்பட்டுள்ளோம்.

எமக்குப் பின்னர் பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்தவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ள போதும், எமக்கு வழங்கப்படவில்லை. எனவே, எமக்கு உரிய நியாயத்தைப் பெற்று தரவேண்டும் எனக் கேட்டு துணைவேந்தர் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆகியோருக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளனர்.

பட்டதாரிகளின் முறைப்பாட்டை ஏற்றுக் கொண்டுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக விசாரணை அதிகாரி சுவேந்திரராஜா உரியவர்களுடன் தொடர்பு கொண்டு இது சம்பந்தமாக விசாரணை நடத்த உள்ளதாக உறுதியளித்தார்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### ஆத்ம சாந்தி பிரார்த்தனை

யாழ்ப்பாணம்

சுனாமி அனர்த்தத்தால் உயிர் நீத்த அனைவருக்கும் ஆத்மசாந்தி பிரார்த்தனை நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குருமூர்த்த ஆலயத்தில் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை இடம்பெறவுள்ளது. அன்றையதினம் காலை 8 மணியிலிருந்து பகல் ஒரு மணிவரை திருவாசக முற்றோதல் இடம் பெறும்.

### திருவாசக முற்றோதல்

உடுவில்

உடுவில் கிழக்கு கற்பகப் பிள்ளையார் கோவிலில் - நாளை காலை 6 மணி தொடக்கம், நண்பகல் 12 மணிவரை திருவாசக முற்றோதல் நடைபெறவுள்ளது. இந்த முற்றோதல் நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஆலய நிர்வாக சபையினரும், இளந்தொண்டர் சபையினரும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

### நத்தார் தின நிகழ்வுகள்

வண்ணை.

யாழ். பகவான் சத்தியசாயி சேவாநிலையத்தில் நத்தார் தின நிகழ்வுகள் நாளை மாலை 4 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். நத்தார் கீதம், நாடகம் என்பவற்றைத் தொடர்ந்து அருட்தந்தை.ஜே.இராசநாயகம் சிறப்புரையாற்றுவார். இந்த நிகழ்வில் அனைவரையும் பங்குபற்றும்படி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (111)

### கருத்தரங்கு

யாழ்ப்பாணம்

நிர்வாகசேவை, அதிபர் சேவை, ஆசிரியர் சேவை ஆகியவற்றுக்கான போட்டிப் பரீட்சைக் கருத்தரங்கு இன்று முதல் எதிர்வரும் 27ஆம் திகதி வரை யாழ்.இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காலை 9 மணிமுதல் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் - பரீட்சைக்கு தோற்றவுள்ளவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

### அஞ்சலி நிகழ்வு

சுதுமலை

கியூடெக்-கரித்தாஸ் நிறுவனத்தின் சமாதானக் குழுவும், உயிர்ப்பூட்டல் குழுவினரும் இணைந்து சுனாமியால் உயிர் இழந்தோருக்கான அஞ்சலி நிகழ்வை நடத்தவுள்ளனர்.

இந்த நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு இளவாலை சென்ஜேம்ஸ் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

சகல மதத்தவர்களையும் நினைவு கூரும் வகையிலான பஜனை அஞ்சலி வ்ழிபாட்டுடன் நினைவுரைகளும் இடம் பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (91)

### யாழ்.வைத்தியசாலையில் பாதுகாப்பு கமராக்கள்

யாழ்ப்பாணம்

யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்தினுள் பொருத்தப்பட்டுள்ள பாதுகாப்பு கமராக்கள் செயற்படத் தொடங்கியுள்ளன. இதன் மூலம் செயற்பாடுகள் நிர்வாக உத்தியோகத்தர் அறையில் பார்வையிட முடியும்.

கண்காணிப்பு கமராக்கள் மூலம் வைத்தியசாலையினுள் திருட்டுக்களை தடுப்பதற்கும், ஊழியரின் செயற்பாடுகள் அவதானிக்கவும் முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. இங்கு பன்னிரண்டு பாதுகாப்பு கமராக்கள் பொருத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (111)

### அதிபர் நியமனம்

வடமராட்சி

கரணவாய் வேதாரணியேஸ்வரா தமிழ் வித்தியாலயத்துக்கு புதிய அதிபராக த.ரவீந்திரன் வடமராட்சி வலயத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னர் கரணவாய் மகாவித்தியாலயத்தில் பத்தாண்டுகளாக பிரதி அதிபராகக் கடமையாற்றி வந்துள்ளார். ஏற்கனவே வேதாரணியேஸ்வரா வித்தியாலய அதிபராகப் பணிபுரிந்த அதிபர் எம்.ஜெயவரதராசா சற்கோட்டை றோ.க.தமிழ்வித்தியாலயத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். (13)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஏழு



பெயர் : த.சரன்ராஜ்
முகவரி : மல்லாகம்.

அகவை ஒன்பது



பெயர் : சு.தர்சினி
முகவரி : வண்ணார்பண்ணை

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் : ..........
முகவரி : ..........
பிறந்த ஆண்டு : ..........
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
..........
பெற்றோர் ஒப்பம்


# சூழல் பாதுகாப்பை பேண உபகுழுவொன்று அமைப்பு

யாழ்ப்பாணம்

சூழல் பாதுகாப்புத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு மரங்களைப் பாதுகாப்பதற்கும், புதிதாக மரங்களை நடுவதற்குமான நீண்டகாலத் திட்டத்தை வகுத்துச் செயற்படுத்தும் முகமாக- கரவெட்டிப் பிரதேசத்தில் உபகுழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் சுகாதார பரிசோதகர், கிராம அலுவலர்கள், வடமராட்சி லயன்ஸ்கழக உறுப்பினர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சுற்றாடல் உத்தியோகத்தர்கள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம், கல்வித் திணைக்களம் ஆகியவற்றின் உறுப்பினர்களே இடம்பெற்றுள்ளனர்.

மேற்படி உபகுழு இந்தத் திட்டத்துக்குத் தேவைப்படும் மர இனங்களைத் தெரிவு செய்வதுடன், வளர்த்தெடுக்க வேண்டியமுக்கிய இடங்கள் என்பவற்றையும் தெரிவு செய்வர். அத்துடன், இவற்றைப் பராமரிக்கும் முறை, நீர்வழங்கும் முறைகளையும் இந்தக் குழு -பரிசீலித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளதாக பிரதேச செயலகம் தெரியப்படுத்தியுள்ளது. (13)

# சுனாமி அனர்த்த ஓராண்டு அஞ்சலி நிகழ்வுகளை முன்னெடுக்க அழைப்பு

சுதுமலை

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு ஓராண்டு நினைவு ஞாபகார்த்தமாக மாவட்ட, பிரதேச, கிராமிய ரீதியாக நடைபெறவுள்ள அஞ்சலி நிகழ்வுகள் தொடர்பாக, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது - நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 - 9.20 மணி வரை இந்து, கத்தோலிக்க, கிறிஸ்தவ கோவில்களில் சமய நிகழ்வுகள், 9.20 மணிக்கு சகல வழிபாட்டுத் தலங்களிலும் 3 நிமிட பிரார்த்தனை, 9.28 மணிக்கு சுனாமி அனர்த்தத்தினால் இறந்தவர்களை நினைத்து அஞ்சலி வாசகத்தை ஒலிபரப்புச் செய்தல். 9.30மணிக்கு இறந்தவர்களின் ஆத்ம அஞ்சலிக்காக 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்துதல்.

9.35 மணிக்கு ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரையாற்றவுள்ளார். இவையாவும் நிறைவு பெற்றபின்னரே ஏனைய நிகழ்வுகளை நடத்துமாறு அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

இதேவேளை யாழ்.மாவட்டத் திலுள்ள சகல வீடுகளிலும் மாலை 7 மணிக்கு சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்துமாறும் அரச அதிபர் மேலும் கேட்டுள்ளார்.

சுனாமி அனர்த்தத்தால் இறந்தவர்களை நினைத்து அனைத்து இடங்களிலும் கீழ்வரும் வாசகத்தினை ஒலிபரப்புமாறு அவர் மேலும் கேட்டுள்ளார்.

2004/12/26 ஆம் திகதி இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் பாரிய அழிவை ஏற்படுத்தி, தற்காலச் சந்ததி எதிர்நோக்கிய கொடூரமான பேரழிவாகிய சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து ஓராண்டு பூர்த்தியாகும் இன்றைய தினத்தில், அதனால் உயிரிழந்த, அனர்த்தத்துக்கு உள்ளாகிய எமது உற்றார், உறவினர்களை உள்ளம் நிறைந்த பாசத்துடன் மனம் நெகிழ்ந்து நினைவு கூறுகிறோம்.

அவர்கள் எதிர்பார்த்தது போல் சுவர்க்கத்தை அடையவும், அதுபோன்ற பேரழிவு என்றென்றும் நிகழாது இருக்கவும் பிரார்த்திப்போமாக.

இவ்வாறு அரச அதிபர் அனுப்பி வைத்துள்ள விசேட வாசகத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (91)

# காணி அன்பளிப்பு

சண்டிலிப்பாய்

சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய அலுவலகத்துக்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கு- பிரான்பற்று மக்கள் நலன்புரிச் சங்கம் இரண்டு பரப்புக்காணியை நன்கொடையாக வழங்கியுள்ளது.

இந்தக் கால்நடை வைத்தியர் அலுவலகம் -சண்டிலிப்பாய் டச்சு வீதியில் தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

பிரான்பற்று மக்கள் நலன் புரிச் சங்கம் இந்தக் காணிக்குரிய உறுதியை- கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் பொ.இராமநாதனிடம் வழங்கியுள்ளனர்.

# உணவு கையாளும் நிலையங்கள் 2006 இற்கான பாதுகாப்பு உரிமத்திற்கு விண்ணப்பிக்குமாறு கோரல்

## சுகாதார சேவையினர் அறிவிப்பு

கிளிநொச்சி—

தாயகப் பிரதேசத்தில் உள்ள அனைத்து உணவு கையாளும் நிலையங்களும், குறிப்பிட்ட சில செயற்பாட்டு நிலையங்களும் 2006 ஆம் ஆண்டுக்கான உணவு, சுற்றாடல், பாதுகாப்பு உரிமங்களுக்காக விண்ணப்பிக்குமாறு தமிழீழ சுகாதார சேவையினர் கேட்டுள்ளனர்.

இது தொடர்பாகச் சுகாதார சேவையினர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

2006 ஆம் ஆண்டுக்கான உணவு, சுற்றாடல், பாதுகாப்பு உரிமத்துக்கு 2006 ஜனவரி 01 ஆம் திகதியிலிருந்து, 31 ஆம் திகதிக்குள்- கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் (கறுக்காய்க் குளம்), வவுனியா (புளியங்குளம்) ஆகிய இடங்களில் அமைந்துள்ள மாவட்ட சுகாதார சேவை பணிமனையில் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

உணவு கையாளும் நிலையங்களான உணவகங்கள், வெதுப்பகங்கள், குளிர்பான உற்பத்தி விற்பனை நிலையங்கள், தங்ககங்கள், எண்ணை உற்பத்தி நிலையங்கள், பல்பொருள் வாணிபங்கள், ப.நோ.கூ.சங்க சில்லறை விற்பனை நிலையங்கள், களஞ்சியங்கள் அரைக்கும் அரிசி, நெல் மற்றும் ஆலைகள், தண்ணீர், உணவு அடைக்கும் நிலையங்கள், நடமாடும் உணவு விற்பனை நிலையங்கள், சிற்றுண்டி பலகார வகைகளைத் தயாரித்து உணவகங்களுக்கு வழங்குபவர்கள், பழவாணிப நிலையங்கள், ஐஸ்கட்டி உற்பத்தி விற்பனை நிலையங்கள், மீன் பதனிடல் நிலையங்கள், இறைச்சி வாணிப நிலையங்கள், பல்பொருள் பெட்டிக்கடை நிலையங்கள் உட்பட, அனைத்து உணவு கையாளும் நிலையங்களும் -

சுத்திரிகரிப்பு நிலையங்கள், வாகன திருத்தங்கள், சிகை அலங்கார நிலையங்கள், சலவை தொழிலகங்கள், மின்னொட்டு தொழிலகங்கள், பொலித்தீன் உற்பத்தி நிலையங்கள், ஐம்பதுக்கும் மேற்பட்ட கோழிகளைக் கொண்ட கோழிப் பண்ணைகள், ஐம்பதுக்கும் மேற்பட்ட விலங்குகளைக் கொண்ட விலங்குப் பண்ணைகள், அரிசி நிலையங்கள், விலங்கறு மனைகள், அச்சகங்கள், வாகன ரயர் ஒட்டுத் தொழிலகங்கள், ஆகிய நிலையங்களும் உணவு, சுற்றாடல், பாதுகாப்பு உரிமத்துக்கு விண்ணப்பிக்குமாறும் தமிழீழ சுகாதார சேவையினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

### சுகாதாரம் அற்ற முறையில் இயங்கிய அரிசி ஆலைகள் மூடப்பட்டன

பூநகரி—

பூநகரி பிரதேசத்தில் தமிழீழ சுகாதார சேவையினரும், பூநகரி சுகாதார திணைக்களமும் இணைந்து அரிசியாலைகள், அரைக்கும் ஆலைகள், சிகை அலங்கரிப்பு நிலையங்கள் என்பவற்றில் சுகாதாரம் சம்பந்தமான சோதனைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்த நிலையங்களில் சுற்றாடல் சுகாதாரத்திற்கு ஊறு விளைவிக்கும் அளவிற்கு நுளம்புகள் பெருக்கமடையும் வகையில் மழைநீர் தேங்கிக் காணப்பட்டதுடன், பொதுவாக சுற்றுப்புற சூழல் சுகாதாரம் அற்றதாக காணப்பட்டமையும் இனங் காணப்பட்டு, அறிவுறுத்தல் வழங்கப்பட்டும், அதனைப் பின்பற்றாமையினால் இந்த நிலையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

# கடும் குளிரால் சிறுவன் பரிதாபமாக மரணம்!

பூநகரி—

பூநகரி பல்லவராயன் கட்டு கிராமத்தில் கடும் குளிர் காரணமாகச் சிறுவன் ஒருவன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பூநகரியைச் சேர்ந்த விக்கினேஸ்வரன் யேசுராசா (வயது 09) எனும் சிறுவனே உயிரிழந்தவராவார்.

அதிகாலை 3.30 மணியளவில் கடும் குளிரினால் பாதிக்கப்பட்ட இந்தச் சிறுவன் உடனடியாக முழங்காவில் வைத்திய சாலைக்கு எடுத்து செல்லப்பட்டபோது சிகிச்சை பலனளிக்காத நிலையில் அங்கு உயிரிழந்துள்ளார்.

சிறுவனின் மரணம் தொடர்பாக விசாரணை நடத்திய திடீர் மரண விசாரணை அதிகாரி குகதாசன், மரணம் தொடர்பாக மேலதிக விசாரணை நடாத்த வேண்டி உள்ளதால், சடலத்தை கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லுமாறு உத்தரவிட்டார்.

# பூநகரியில் நடைபெற்ற காலம்கடந்த பதிவுச் சேவையால் பலருக்கு நன்மை

பூநகரி—

பூநகரியில் கடந்த 17.12.2005 இல் நடாத்தப்பட்ட காலங் கடந்த பிறப்பு, இறப்பு மற்றும் திருமண பதிவுகளின்போது பலருக்கு மேற்படி பதிவுகள் தொடர்பாக உரிய தீர்வு காணப்பட்டது.

இதன்போது 33 காலங்கடந்த பிறப்புகளும், 13 இறப்புகளும், 08 திருமணப் பதிவுகளும் பதிவு செய்யும் வகையில் உரிய தீர்வுகாணப்பட்டது. அத்துடன் மேலதிக பதிவு நடவடிக்கைகளுக்காக 47 விண்ணப்பங்கள் உரிய இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இந்த நடமாடும் காலங்கடந்த பதிவுச் சேவையால், இப்பிரதேசத்தைச் சேர்ந்த பலரும் நன்மை அடைந்துள்ளனர்.

இந்த நடமாடும் சேவையில் வடக்கு- கிழக்கு மாகாண உதவிப்பதிவாளர் நாயகம் என். சதாசிவஐயர், மாவட்ட உதவி பதிவாளர்களான -பிரபாகரன் நடராசா, பூநகரி பிரதேச பதிவாளர்களான பொ.தர்மலிங்கம், திருமதி.குணசேகரம் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

### முல்லையில் வீடமைப்பு பணிகள்

முல்லைத்திவு—

முல்லைத்திவு மாவட்டத்தில் சுனாமி அனர்தத்தால் வீடுகளை இழந்த மக்களுக்காக சுமார் ஆறாயிரம் வீடுகள் அமைக்க வேண்டி உள்ளதாக முல்லை மாவட்ட செயலகம் செம்மலை பகுதியில் வீடமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், தற்போது செம்மலைக் கிழக்கு, அலம்பில் வடக்கு, அலம்பில் தெற்கு, உப்புமாவடி ஆகிய பிரதேசங்களிலும் வீடமைப்புப் பணிகள் இடம் பெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளது.

இந்த வீடமைப்புப் பணிகளை சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது.

# புனித ராயப்பர் தேவாலயம் நினைவாலயமாகப் பிரகடனம்

முல்லைத்தீவு—

முல்லைத்தீவு புனித ராயப்பர் தேவாலயம், இனிவரும் காலத்தில் வழிபாட்டுக்குப் பயன்படுத்தப்படமாட்டாது என தேவாலய வணபிதா ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார் தெரிவித்துள்ளார்.

இதற்குப் பதிலாக அது நினைவாலயமாகப் போற்றப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட ஆழிப்பேரலையின் காரணமாக இந்த ஆலயம் முற்றாகச் சேதமடைந்துள்ளது.

இந்த நிலையில் ஆழிப் பேரலையால் முல்லைத்தீவில் பலியான சுமார் 3500 பேரின் நினைவாக அவர்களின் பெயர்களை இந்தத் தேவாலயத்தின் தூண்களில் பொறிக்கப்பட்டு, எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் இந்த ஆலயம் நினைவாலயமாகப் போற்றப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# மருத்துவக்கல்லூரி மாணவர்களின் மருத்துவ நுண் ஆய்வுப் பட்டறை

கிளிநொச்சி—

தமிழீழ மருத்துவக் கல்லூரி மாணவர்களால் அண்மையில் மருத்துவ நுண் ஆய்வு பட்டறை ஒன்று கிளிநொச்சி திட்டமிடல் செயலகத்தில் நடத்தப்பட்டது.

இருதய சிகிச்சை நிபுணர் மன்மோகன் தலைமையில் இடம்பெற்ற இவ் ஆய்வு பட்டறையில் பின்வரும் விடயங்கள் குறித்து மாணவர்களால் ஆய்வு செய்யப்பட்டன.

இந்த ஆய்வில் போசாக்கின்மைக்கும் குழந்தைகளின் சிறுநீரக பருமனிற்கும் இடையேயான தொடர்பு, கிளிநொச்சி மாவட்டத்தில் பாம்புகளின் பரம்பலும் பாம்புக்கடிக்கு உள்ளானோருக்கு சிகிச்சை அளிக்கப்பட்ட விதமும், வீதி விபத்துகளும் அதற்கான காரணங்கள் மற்றும் அதற்குரிய தீர்வுகளும், சுனாமியால் சிறுவர்களுக்கு ஏற்பட்ட மன உளைச்சலும், அவர்களுக்கு உளவியல் நிபுணர்களால் அளிக்கப்பட்ட சிகிச்சை முன்னேற்றமும், கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட கர்ப்பிணி தாய்மார்களின் போசாக்கும் மற்றும் குழந்தைகளின் பிறப்பு நிறைக்கிடையிலான தொடர்பும் போன்றவை குறித்து ஆய்வு செய்யப்பட்டன.

இந்த நிகழ்வில் தமிழீழ மருத்துவப்பிரிவு பொறுப்பாளர் ரோகா, தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் ஓவியன் பற்சிகிச்சை நிபுணர் வாசுகி, அரச அரச சார்பற்ற நிறுவனங் களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



யாழ்.குடாநாட்டில் அதிகரித்துவரும் இராணுவ வன்முறைகளைக் கண்டித்து நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் கண்டனப் பேரணி இடம் பெற்றது. பேரணியில் கலந்துகொண்ட ஒருபகுதியினரைப் படத்தில் காணலாம்.

## காலச் சுவட்டில்...

### இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

### டிசம்பர் 25

1524 : புகழ்பெற்ற போர்த்துக்கீசிய கடலோடி வாஸ்கொடகாமா கொச்சியில் மரணமானார்.

1582 : முதன் முதலாக குழாய்மூலம் குடிநீர்விநியோகம் லண்டனில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

1841 : "கென்ட் உடன்படிக்கை" என்றழைக்கப்படும் சமாதான உடன்படிக்கை அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் இடையே கையெழுத்தானது.

1821 : ஹென்ரிச் பிரான்டெஸ் என்பவரால் சாக்ஸோனியில் வானிலையியல் நிலைகளைப் பற்றிய வானிலை வரைபடம் முதனமுதலாகத் தயாரிக்கப்பட்டது.

1851 : அமெரிக்காவில் காங்கிரஸ் நூலகத்தில் பெரும் தீ விபத்து ஏற்பட்டது. இதில் அங்கிருந்த நூல்களில் மூன்றில் இரு பங்கு நூல்கள் தீக்கிரையானது.

1898 : முதன் முதலாக "ஈஸ்ட்ரூட் வின்" என்ற கப்பலில் வானொலித் தகவல் தொடர்புக்கருவி பொருத்தப்பட்டது.

1906 : உலகின் முதலாவது வானொலி ஒலிபரப்பு, பேராசிரியர் ரெஜினோல்ட் ஆபிரே பெஸ்ஸென் டென் என்பவரால் மாஸா சூஸட்டில் பிரான்ட்ராக் என்னுமிடத்தில் இருந்த 129 மீற்றர் உயரமுள்ள கோபுரம் மூலமாகச் செய்யப்பட்டது.

1924 : எட்வின் ஹப்பிள் பால் மண்டபத்தின் எல்லையைக் கண்டுபிடித்தார்.

✪ : அல்பேனியா குடியரசு நாடானதாக அறிவிக்கப்பட்டது.

1940 : புளூட்டோனியம் எனும் மூலகத்தைக் கண்டுபிடித்ததாக ஸீபோர்க், மாக்மிலன் என்ற இருவரும் அறிவித்தனர்.

1941 : மணிலா மீது ஜப்பானியர் தாக்குதலை ஆரம்பித்தனர்.

1942 : இடம்குறித்து ஏவப்படக்கூடிய கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகள் ஜேர்மனியின் பீனிமுன்டே என்ற இடத்தில் இருந்து ஏவப்பட்டது.

1948 : டாக்டர் மேரியா டொக்காஸ் என்பவர் மாஸா சூஸட்டிலுள்ள தனது வீட்டில் முதன் முதலாக சூரிய ஒளி மூலம் வெப்பமூட்டும் சாதகத்தை அமைத்தார்.

1951 : இத்தாலியின் குடியேற்ற நாடாயிருந்த லிபியா விடுதலை அடைந்தது. ஐக்கிய நாடுகள் சபையினது முயற்சியால் விடுதலை அடைந்த முதல் நாடு இத்தாலியாகும்.

1964 : இலங்கையில் கடுமையான சூறாவளி வீசியது.

1965 : லெய் செஸ்டர் சையர் என்ற இடத்தில் 45 கிலோ நிறையுடைய விண் எரிகல் ஒன்று விழுந்தது.

1966 : இம்மாதம் 21 ஆம் திகதி ரஷ்யாவால் ஏவப்பட்ட லூனா - 13 என்ற விண்கலம் நிலவின் மமபுயல் கடல்டுடு என்ற பகுதியில் இறங்கி ஒளிப்படங்களை எடுத்து அனுப்பியது.

1968 : இம்மாதம் 21 ஆம் திகதி அமெரிக்காவால் மூன்று விண்வெளி வீரர்களுடன் ஏவப்பட்ட அப்பலோ - 8 என்ற விண்கலம் நிலவின் ஈர்ப்புப் பகுதிக்குள் நுழைந்து, அதனை வலம்வர ஆரம்பித்தது. முதன் முதலாக நிலவின் மறுபக்கத்தைப் பார்த்தது இதில் சென்ற விண்வெளி வீரர்களேயாவர்.

1971 : பெருநாட்டின் காட்டுப் பகுதிகளுக்கு மேலாக 9000 அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்த ஒரு பயணிகள் விமானம் வெடித்துச் சிதறியது. 17 வயதுடைய ஜீலியன் கியோபெக் என்னும் பெண் மட்டும் ஆச்சரியத்தக்க விதத்தில் உயிர் தப்பியிருந்தார். விபத்து நடந்து 10 நாட்களுக்கு பிறகே இந்தப் பெண் காட்டு வாசிகளால் காப்பாற்றப்பட்டிருந்தாள்.

1973 : இந்தியாவில் தமிழ் நாட்டில் பட்டம் பதவிகளை மதிக்காதவரும், சமூகச் சீர்திருத்தவாதியுமான பெரியார் ஈ.வெ.இராமசாமி நாயக்கர் மரணமடைந்தார்.

1979 : காபூலில் அரசு கவிழ்ந்ததால், ரஷ்ய இராணுவம் ஆப்கானிஸ்தானில் நுழைந்தது.

1987 : தமிழ் நாட்டின் முதலமைச்சராக 10 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றிய பொன்மனச் செம்மல் என அழைக்கப்பட்ட எம்.ஜி. இராமச்சந்திரன் காலமானார்.

தொகுப்பு : - சந்துரு